
www.tamilarangam.net



# தூண்டில்

Tamilische Zeitschrift




உள்ளே....!

***

அற்றாக் !

*

கோவணாண்டிகள்

*

அருவி ஆசிரியருக்கு நடந்ததென்ன..?

*

பட விமர்சனம்

*

பிரபா சொன்னால் கொலை!

*

ஈழச் செய்திகள்

***

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# இப்படித்தான் போகிறது!

மிதவாதமாகச் செழித்துப் போய் மூன்னாக மிளிர்ந்து பொதுஜனங்களின் மத்தியில் நெருக்கடிகளை ஏற்படுத்துவதில் புலிகளும் சரி, இலங்கை அரசும் சரி தளர்ந்து போவதாக இல்லை.

செஞ்சிலுவைச் சங்க வாகனங்களில் அதிகாரிகள் சிவப்புக் குறியோடு வடக்கும், கிழக்கும் தொடர்ந்து. தெற்குமாக ஒடோ ஒடென்று ஒடிக் கொண்டேயிருக்கின்றனர். எரிபொருள் விலை உச்ச நிலையை அடைந்துபோய் விட்டது. மா போன்ற உணவுப் பொருட்களுக்கும் விலை ஏற்றம்.

தீர்வு என்ற பேச்சு இப்போது இலங்கை அகராதியில் இழுத்தடிப்பு என அர்த்தங் கொள்ளப்படுகிறது. தம்மைத் தாம் வயிறு வளர்க்கும் போட்டியில் நலன்புரி அமைப்புகளும், ஏழ்மையை வைத்து மதம் மாற்றும் முயற்சியில் உதவி அமைப்புகளும் முன்னேறி வருகின்றன.



இவ்வேளையில் மக்களுக்குப் பைத்தியம் பிடிக்காமல் வேறென்ன பிடிக்கும்.

பிராந்திய ஆக்கிரமிப்பில் அரச படைகளின் முன்னேற்றமும்(?), பயப்பிராந்தியில் மக்கள் அல்லோலகல்லோலப்படுவதும் இங்கு தொடர்ந்தும் நிகழ்வன.

ஹமில்ரன் வணசிங்க (கூட்டுப்படைத் தளபதி) இந்தியப் படையின் வருகை இன்னொருமுறை நடைபெறுமா என்ற வினாவுதலுக்கு, அதைப் பற்றிய பேச்சுக்கு இப்போது அவசியம் இல்லை. எனினும் எமக்கான உதவிகளை நாம் வரவேற்போம் என்கிறார்.

சொந்த நாட்டில் ஒன்றாய் இருந்து, ஒன்றாய் வாழ்ந்து வரும் தமிழர்கள் எதிரிகள்.' யாரோ ஒரு ஹிந்தி பட்டாலியன்கள், பாரா துருப்புகள் நண்பர்கள். 'கிப்ஸ்' சாரத்தை கிழித்துக் கொளுத்தி, 'விக்ஸ்' இறக்குமதியைத் தடை செய்து நண்பர்களின் சொத்துகளோடு குரோதம் பாராட்டியதெல்லாம்...!

சொந்தப் பிரச்சினை என்ற அடக்கமாக வாசிக்கும் ஒரு போக்கை பேரினவாத தலைமைகள் தொடர்ந்து கடைப்பிடித்து வருகின்றன. ஆனால் உள்ளால் தண்ணீருக்குள் நெருப்புக் கொண்டு செல்வது என்று சொல்வது போல அடிக்கடி நடைபெறும் நிகழ்வுகள் சிலவேளைகளில் வெளியாகி மக்கள் மத்தியில் பிரபல்யம் பெற்றுவிடுவது முண்டு

முழு தமிழ் மக்களும் புலிகள் என்று வாதிடும் அரச நிர்வாகம்-

"புலிகள் ஜனனாயக வழிக்கு வருவது சந்தேகம். அவர்களை(???) முழுமையாகச் செயலிழக்க வைப்பதே எமது நோக்கம்" என்பதை ஆணித்தரமாகக் கூறுவதில்,

எல்லாத் தமிழ் மக்களையும் கொலை செய்து விட்டுத்தான் நிமிர்வோம் என்ற தொனி நிறையவே தொனிக்கிறது.

ஆச்சாரியார்
(ஈழம்)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

R. Pathmanaba Iyer
27-B High Street
Plaistow
London E13 0AD
Tel: 020 8472 8323

# 80களில் கலை, இலக்கியம்

எழுபதுகளின் தொடக்கத்தில் யாழ்ப்பாணத்தில் பிரபல்யம் பெற்ற நாடகங்கள் அல்லது நாடக அமைப்புகள் பின்வருமாறு:

**காங்கேசன்துறை வசந்தகானசபாவின் நடிகமணி வி.வி.வைரமுத்து** வழங்கும் நாடகங்கள். அரிச்சந்திர மயானகாண்டம் சிறப்புப் பெற்ற வி.வி. வைரமுத்துவின் நடிப்பிலிருந்தும், குரல் வளத்திலிருந்தும் மீள முடியாத பல கலைஞர்கள் இப்பொழுதும் யாழ்ப்பாணத்தில் இருக்கிறார்கள்.

இதனுடன், **கோண்டாவில் வாகீஸ்வரி நாடக மன்றத்தின் அலாவுதீன், சுண்டிக்குளி யாழ் கலாமன்றத்தின் அடங்காப்பிடாரி, அரியாலை திடீர் நாடக மன்றத்தின் வெளிக்கிட்டடி விசுவமடுவுக்கு, அளவெட்டி பாரதி கலாமன்றத்தினரின் வடக்கும் தெற்கும், வரணியூரானின் புஞ்சுகர் பொன்னையா** ஆகியன குறிப்பிடத்தக்கன.

இவற்றில் வி.வி.வைரமுத்துவின் நாடகங்கள் தவிர்ந்த ஏனைய நாடகங்கள் தமிழ்நாட்டுச் சினிமாவின் பாதிப்புக்கு உட்பட்டன. சினிமாத் தன்மைகளும், சினிமாப் பாடல்களும், சினிமாக் கதைகளும் நிறையப் பெற்ற நாடகங்கள். ஆகவே இந் நாடகங்கள் அக்காலத்திய அரசியல், சமூக, பொருளாதார நிலைமையைச் சுட்டிக் காட்டும் எனக்கொள்ள முடியாது. இந் நாடகங்களை ஓரிரு வரிகளிலேயே புறந்தள்ளி விடலாம்.

இக் காலகட்டத்திலும் அரசியல் நிகழ்வுகளைச் சித்தரிக்கின்ற, அரங்கத் தன்மை வாய்ந்த நாடகங்கள் எழாமலில்லை. இவை மூற்று முழுதான கலாபூர்வ வெற்றியைக் கொண்டிருந்தவை எனக் கூறமுடியாவிடினும், ஈழத்து அரங்குக்கு வளத்தைச் சேர்த்தவை.

**நெல்லியடி அம்பலத்தாடிகளின் கந்தன் கருணை** மிகவுமே குறிப்பிட வேண்டிய நாடகம். 1969 இல் மாவிட்டபுரம் கந்தசாமி கோயிலில் தாழ்த்தப்பட்ட சிறுபான்மை மக்களை கோயிலினுள்ளே வர விடாமல் தடுத்ததனை கதைப்போக்காகக் கொண்டு காத்தவராயன் கூத்துப் பாணியில் படைக்கப்பட்ட ஒரு நாடகம்.

**ஆ.த.சித்திரவேல்** எழுதிய **செவ்வானத்தில் ஒரு** எனும் நாடகமும் தாழ்த்தப்பட்ட மக்களின் பிரச்சினையையே கருவாகக் கொண்டது. இலங்கைக் கலைக்கழகம் நடாத்திய நாடகப் போட்டியில் முதலாமிடம் பெற்ற இந் நாடகம் அரங்க அநுபவம் எனும் வகையிலும் குறிப்பிட வேண்டியது.

**காலையடி மறுமலர்ச்சி மன்றத்தினரின் காகிதப் புலிகள்** நாடகமும் இவ் வகையானதே. வர்க்கப் போராட்டத்தைச் சித்தரிப்பது இந் நாடகம். யாழ்ப்பாணச் சூழலுக்கு இவை வேண்டிய நாடகங்கள்.

ஒருபுறத்தில் இவற்றிலிருந்துதான் யாழ்ப்பாணத்தின் அரங்கத்தன்மை வள



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ர்ச்சி பெறத் தொடங்கியது. யாழ்ப்பாணத்து நாடக அரங்கு யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் வரவினூடாக வளர்ச்சி அடைந்தது என்றும் ஒரு சாரார் கூறுவதுண்டு. அதில் பாதி தான் உண்மை. கிராமங்களில் இருந்து அவ்வப்போது எழுந்த இத்தகைய நாடகங்களே இத்தகைய அரங்க வளர்ச்சியின் தொடக்கப் புள்ளிகள். இனிக் குறிப்பிடப் போகின்ற தேசிய இனப் பிரச்சினை தொடர்பான கலைவடிவங்களின் மூலங்களும் இவ்வாறு கிராமங்களிலிருந்து வெளிக் கிளம்பியவைதான்.

எழுபதுகளின் பிற்காலப் பகுதியில் யாழ்ப்பாணத்தில் நாடகத்தைப் பிரதானமாகக் கொண்ட இரு அமைப்புகள் தோன்றின. **குழந்தை ம. சண்முகலிங்கம், அ.தாசீசியஸ்** போன்றோரை அமைப்பாளர்களாகக் கொண்ட **நாடக அரங்கக் கல்லூரி** எனும் நாடகத்திற்கான அமைப்பும், **நிர்மலா நித்தியானந்தன், க.பாலேந்திரா** ஆகியோரை அமைப்பாளராகக் கொண்ட **அவைக்காற்றுக் கலைக் கழகம்** எனும் அவைக்காற்றுக் கலைகளுக்கான அமைப்பும் தோற்றம் பெற்றன.

இவற்றுள் அவைக்காற்றுக் கலைக் கழகம் கொழும்பையும் பிரதானப்படுத்தி தனது கலைச் செயற்பாடுகளை நிகழ்த்தியது.

இவற்றில் நாடக அரங்கக் கல்லூரி வெவ்வேறு வகையினதான நாடகங்களை மேடையேற்றியது. அரங்க உணர்வை வளர்த்தல் இதனது நோக்கம். பல்வகைத் தன்மை பொருந்திய நாடகங்கள் இவற்றில் காணப்பட்டன. ஆரம்பத்தில் அ.தாசீசியஸின் நெறியாட்சியில் அலெக்ஸி அபுஷோவின் **பிச்சை வேண்டாம்** எனும் மொழிபெயர்ப்பு நாடகம் மொழிபெயர்ப்பு நாடகங்களுக்கு முன்னோடியாக அமைந்தது. (இது நாடக அரங்கக் கல்லூரியின் தயாரிப்பு அல்ல!)

பின்னர் **மகாகவியின் கோடை, புதியதொரு வீடு,** அம்பலத்தாடிகளின் கந்தன் கருணை, **குழந்தையின் உறவுகள், கூடிவிளையாடு பாப்பா** (சிறுவர் நாடகம்), **வீ.எம். குகராஜாவின் அவன் ஏன் கலங்குகிறான்?, நா. சுந்தரலிங்கத்தின் அபசுரம், மௌனகுருவின் சங்காரம்,** தாசீசியஸின் **பொறுத்தது போதும், ஞானியின் குருஷேத்திரோபதேசம்** ஆகியன தாசீசியஸ், குழந்தை, மௌனகுரு, **றேமன்**, குகராஜா ஆகியோரின் நெறியாள்கையில் உருவாகியவை. பாநாடகம், காத்தவராயன் கூத்துப் பாணி, யதார்த்த வகை, மோடிப்படுத்தப்பட்ட தன்மை, அபத்தவகைச் சாயல், மட்டக்களப்புக் கூத்து, வடமோடி, தென்மோடிக் கூத்து, சிறுவர் நாடகம் ஆகிய பல்வேறு அம்சங்கள், தன்மைகள் கொண்ட நாடகங்களாக இவை அமைந்தன. அது மாத்திரமன்றி, பல நாடக எழுத்தாளர்களும், நெறியாளர்களும் உருவாகினர். இன்னும் சொல்லப் போனால் பொறுத்தது போதும், சங்காரம் முதலியன கிராமங்களையும் சென்றடைந்தன.

மறுபுறத்தில் ரென்னஸி வில்லியம்ஸின் **கண்ணாடி வார்ப்புகள்,** கார்ஸியா லோர்காவின் **ஒரு பாலை வீடு**, பேர்த்தோல்ற் பிறெஷ்ஷின் **யுகதர்மம்,** அன்ரன் செக்கோவின் **சம்பந்தம்** ஆகிய நாடகங்களை நிர்மலா நித்தியானந்தனின் மொழிபெயர்ப்பில் பாலேந்திரா நெறியாட்சி செய்ய அ.க கலைக் கழகம் தயாரித்திருந்தது. அவை மட்டுமன்றி சரஸ்வதி ராம்நாத்தின் **அரையும் குறையும்**, பாதல் சர்க்காரின் **முகமில்லாத மனிதர்கள்**, கிரிஷ் கர்னாட்டின் **துக்ளக்**, ந.முத்துச்சாமியின் **நாற்காலிகள், சுவரொட்டிகள்** ஆகியனவும் அ.க. கழகம் தயாரிக்க பாலேந்திரா நெறியாள்கை செய்திருந்தார்.

அ.க.கழகத்தில் நிர்மலா நித்தியானந்தன், பாலேந்திரா என்கின்ற தனிநபர்களே முதன்மை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பெற்றனர். இருவரையும் மீறி இங்கு நாடகங்கள் வெளிவரவில்லை. இவைகளில் பெரும்பான்மை மொழிபெயர்ப்பு நாடகங்கள். இதற்கு "தமிழில் நாடகங்கள் இல்லை. மொழிபெயர்ப்பு நாடகங்கள் ஊடாக தமிழில் நல்ல நாடகங்களை அறிமுகப்படுத்துகிறோம்" என்பது அ.க.கழகத்தினரின் வாதம்.




இவைகளையே 80களின் நாடக முயற்சிகளுக்குப் பின்னணியாகக் கொள்ளலாம். இப் பின்னணியில்லாமல் நாடக முயற்சிகள் மேற்கொள்ளல் என்பது சாத்தியம் என்றபோதும், எத்தகைய கலை முயற்சிகளும் ஒன்றினது தொடர்ந்தேர்ச்சியான வளர்ச்சி என்பதனையும் மனத்திலிருத்தல் வேண்டும்.

1980ஆம் ஆண்டு அ.க. கழகம் **கானசாகரம்** எனும் இசை நிகழ்ச்சி ஒன்றினை நடாத்தினார்கள். **கண்ணன்** பிரதான இசை வழங்க **எம்.சத்தியமூர்த்தி, சு.வில்வரத்தினம், லதா ராமநாதன்** ஆகியோர் பாடகர்களாக அமர்ந்திருக்க அ.க.கழகம் தயாரித்திருந்தது. மகாகவி, நீலாவாணன் ஆகியோரின் கவிதைகள் பாடல் வடிவம் பெற்றன.

மகாகவியின் -

*இப்பொழுதே தூங்கிவிடு*
*இல்லையெனில்*
*பின்னாளில்*
*எப்பொழுதும் நேரம்*
*கிடைக்குமென*
*எண்ணாதே*

- எனும் வரிகளும்,

நீலாவாணனின் -

*வண்டிக்காரா ஓ*
*வண்டிக்காரா..*
*ஓட்டு வண்டியை ஓட்டு*
*போவோம் புதிய நகரம்*
*நோக்கி*
*பொழுது போகுமுன் ஓட்டு"*

- எனும் கவிதை வரியும் பாடல்களாயின.

"வண்டிக்காரா..." பாடல் இப்பொழுதும் இலங்கை வானொலியில் பிரபல்யம்.

ஆனால் இவற்றிற்கும் அப்பால் அப்போது தேசிய இனப் பிரச்சினையில் விடுதலை வேண்டி ஆயுதம் வெளிக்கிளம்புகிற காலத்தில் பின்வரும் பாடல்களே பலரால் விரும்பப்பட்டன:

*எப்படிப் பாடுவோம்?*
*அந்நியனின் கால்கள்*
*எங்கள் நெஞ்சிலே*
*பதியும்போது*
*எப்படிப் பாடுவோம்*

- எனும் கார்ஸியாலோர்காவின் கவிதை வரியும்,

*போர்முனைக்குச்*
*சென்றவர்கள்*
*வென்றதுண்டு*
*வந்ததில்லை*

[தொடர் 12 ஆம் பக்கம்]



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# நான் சிவப்பு மனிதன்

நான் சிவப்பு மனிதன்
காடுகள், மலைகள், ஏரிகளின்
மைந்தன்!
அல்பால்ற்றினால்* எனக்கென்ன நன்மை?
செங்கட்டியும், கொங்கிறீட்டும்
எனக்களிக்கும் பயனென்ன?
வாகனங்களினால் எனக்கென்ன பயன்பாடு?
தெய்வீகத்தன்மை வாய்ந்த
இப் பரிசுகளுக்காக
நான் அடக்கத்துடன்
நன்றியுடையவனாக இருக்க வேண்டுமென
நீ நினைக்கிறாயா?

நான் சிவப்பு மனிதன்
மரங்கள், குன்றுகள், நீரோடைகளின்
மைந்தன்!
பீங்கானும், பளிங்கும்
எனக்களிக்கும் பயனென்ன?
பொன்னும், வயிரமும்
எனக்களிக்கும் நன்மையென்ன?
பணம் எனக்களிக்கும்
பயன்பாடுதானென்ன?
சொர்க்கத்திலிருந்து அனுப்பப்பட்ட
இவ் வஸ்துகளை ஏற்றுக்கொள்ள
நான் ஆவலுள்ளவனாக இருக்க வேண்டுமென
நீ நினைக்கிறாயா?

நான் சிவப்பு மனிதன்
பூமி, நீர், ஆகாயத்தின்
மைந்தன்!
பட்டும், வெல்வெட்டும்
எனக்களிக்கும் பயனென்ன?
நைலோனும், பிளாஸ்ரிக்கும்
எனக்குத் தரும் உபயோகமென்ன?



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

உன்னுடைய மதம்
எனக்குத் தரும் உபயோகமென்ன?
இந்தப் புனிதமானதும்
பூஜிக்கத்தக்கதுமானவற்றின் முன்னால்
நான் பணிவுடன்
முழந்தாளிட்டுக்கொள்ள வேண்டுமென
நீ நினைக்கிறாயா?

நான் சிவப்பு மனிதன்!

வெள்ளைச் சகோதரனே
பாவங்கள், தீங்குகளிலிருந்து
என்னை நீ
காப்பாற்ற வேண்டாம்.
உன்னை நீயே
காப்பாற்றிக் கொள் என்று
உன்னைப் பார்த்து
நான் கேட்கிறேன்!

- *மூலம்:* Duke Redbird **
- *தமிழில்:* அருள்

---

## கௌதமபுத்தனுடன் நான்

கால காலத்தை நகர்த்தும்,
கடிகார முட்களின் பிரயத்தனம்.
பிரளயத்தின் தூதுவன் தூமகேது.
இடைவெளிகளின் காலக்கணக்கில்
நூலளவு.

மோனத் தவமிருந்த புத்தன்
தவம் கலைந்தெழுந்தான்.
லங்கா தெருக்களிலே நடந்தான்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

காற்றினிலே கலந்திருந்த
கந்தகத்தை சுவாசித்து
கொண்ட தவப்பயனால் பிழைத்து
தாகம் தலையெடுக்க மாவலியில் வாய் நனைத்து
குருதியென பதைபதைத்து உமிழ்ந்தான்.
இன்று பௌர்ணமி நாள்.
யாசித்தான்.
சிலர் தானமிட,
இடுவதுபோல் சிலர் எடுக்க
தீப்பெட்டி,
பூவிசிறி.
மகாவம்சம்,
வெடிகுண்டு.
வாக்குச்சீட்டு...
பிச்சா பாத்திரம் எவ்வளவு பெரியது!
கொள்ளளவுள்ளது!!

மாணிக்கதீபத்து கடவுச்சீட்டுப் பிரஜையின் கடமையாய்
யசோதரா என்றொரு மந்திரமெழுதி
பிச்சா பாத்திரத்துள்குள்ளே இட்டேன்.
தீட்சணித்து எனைப் பார்த்தான்.
"யசோதராவுக்கு எவ்வழி சொன்னாய்?"
என நான் வினித்தேன்.
அவனுக்குள்ளும் ஓர் இருப்பு இருந்தது.
ஒருமுறை நீ எனை சித்தார்த்தாவென
அழையென இரந்தான். அழைத்தேன்.
நகரம் அசைந்தது.
இவனது ஒரு பல் யானையின் மீது.
வரிசையாய் யானைகள், அங்குச பாகர்கள்.
இவற்றின் பின்னே இன்னும் சில பேர்.
விரைவாய் விரைவாய் அவ்விடம் நீங்கினோம்.

கானகத்து நடுவில்
காவி களைந்த புத்தனும் நானும்
இலைகளைக் கொய்து இடுப்பில் கட்டி
அந்தகாரத்து இருளைப் போக்கவும்
யசோதராவைத் தேடிப் பிடிக்கவும்
ஆளுக்கு இவ்விரண்டு கல்லையெடுத்து
ஆதிமனிதராய் உரசத் தொடங்கினோம்.

*

இரா.ரஜீன்குமார்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பாராளுமன்ற தெரிவுக் குழு தனது நீண்டகால மௌனத்தின் பின் திடீரென ஒரு அபிப்பிராயத்தை வெளியிட்டது. அதுதான் வடக்கு, கிழக்கு இணைப்பை நிரந்தரமாக்குவதா, இல்லையா என்று தீர்மானிக்க கிழக்கில் ஒரு கருத்துக் கணிப்பு வாக்கெடுப்பை நடாத்துவது என்பதாகும்.

வடக்கு மாகாண மக்களும், கிழக்கு மாகாண மக்களும் இணைந்து வாழ விரும்புகிறார்களா என்பதை அறிவதற்கு கிழக்கு மாகாணத்தில் மட்டும் தேர்தல் நடத்துவது என்ற கேலிக்குரிய விடயத்தை அறிவித்ததுதான் தாமதம் எல்லாத் தமிழ்க் கட்சிகளும் ஆகா ஒகோ என்று எதிர்த்தன. ஈ.பி.ஆர்.எல்.எவ்.வோ ராஜீவ் அப்படிச் சொல்லவில்லையே என்று கூறியது. இது தொடர்ந்து பிற்போடப்பட்டுக்கொண்டே வரும் என்று ராஜீவ் தமக்கு உறுதியளித்தாகக் கத்தியது. ஆனால் அதற்கு அரசு தரப்பில் எந்தப் பதிலும் இல்லை. `ராஜீவ் படுக்கையறையில் வைத்துச் சொன்னதை அரசியல் முடிவாக்கப் பார்க்கிறீர்களா?` என்று கிண்டல் செய்ததோடு சரி.

தமிழ்க் கட்சிகள் வழமைபோல் தமது கையாலாகாத்தனத்தைப் பற்றி வெளியே சொல்லிக் கொள்ளாமல் மௌனமாகிவிட்டன. அரசு தனது கடமைகளை ஒழுங்காகச் செய்தது. அவற்றில் கொழும்பு விவேகானந்தா மண்டபத்தில் அகதிகளாக இருந்த கிழக்கு மாகாண குடும்பங்களை பலவந்தமாக பஸ்ஸில் ஏற்றி மட்டக்களப்புக்கு அனுப்பியது ஒன்று. இது தொடர்பாக இதுவரை யாரும் மூச்சுக்கூட விடவில்லை.

ஆனால், கடந்த 6ஆம் திகதி கருத்துக் கணிப்பு வாக்கெடுப்பை நடத்துவது தொடர்பாக நிலமையை ஆராயக்கூடிய பாராளுமன்ற தெரிவுக்குழுவுக்கு `தகவல்` தெரிவித்த இராணுவ உயர்மட்டக்குழு, அங்கு தேர்தல் நடாத்தப்படுவது சாத்தியம் இல்லை என்று அறிவித்துள்ளது. அங்குள்ள பாதுகாப்பு நிலமைகள் அதற்கு வாய்ப்பாக இல்லை என்பது அதன் கணிப்பாகும்.

அப்போ, விவேகானந்தா மண்டபத்திலிருந்து கதறக் கதற பலவந்தமாக அகதிகளை பஸ்ஸில் ஏற்றி அனுப்பியது எந்த அடிப்படையில்? தமிழர்களுக்கு பாதுகாப்பு முக்கியமில்லை என்பதுதானோ அரசின் கருத்து!

இதுபற்றி யாரும் கேட்கவில்லை!!

இந்த கிழக்கு மாகாண வாக்கெடுப்பு விவகாரம் இலங்கை அரசின் தொடர்ச்சியான வடக்கு, கிழக்கு பிரிப்புக்கான நோக்கத்தின் ஒரு அம்ச



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மே என்பதை அம்பலப்படுத்த இந்தக் கட்சிகள் எவையும் முயற்சிக்கவில்லை. ஆனால் பிரச்சினையைப் பேசித் தீர்க்கப் போவதாக இன்னமும் கூறிக்கொண்டே காலத்தை ஓட்டுகின்றன.

ஒவ்வொரு அசைவிலும் அரசு தனது திட்டமிட்ட நோக்கில் முன்னோக்கி காலடி வைத்து வருகிற அதேவேளை, இந்தக் கட்சிகள் தமது ஒவ்வொரு பிடியாக இழந்து வருகின்றன. இந்த இலட்சணத்தில், திரும்பவும் இந்தியாவில் தமது மாநாட்டை நடாத்திய ஈ.பி.ஆர்.எல்.எவ், இந்தியா எம்மைக் காக்க வேண்டும் என்று அழைப்பு வேறு விட்டுள்ளது! இந்தக் குழுக்களது இப்படியான நடவடிக்கைகளால் ஏதாவது இழக்கப்படும் போதெல்லாம் அவ்விழப்புகள் இவைகளைத் தாக்குவதில்லை. மாறாகத் தமிழ் மக்களது தலையில் வந்து விழுகின்றன.

▦ ▦ ▦

முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசாவின் கையாளாக இருந்து, பலவேறு சித்திரவதைகள், படுகொலைகளுக்கு காரணமாக இருந்த முன்னாள் டி.ஐ.ஜி உடுகம்பொல நாடு திரும்பியது மிகவும் சுவாரஸ்யமான ஒன்றாகும்.

உயர் நீதிமன்ற விசாரணைக்கு சமூகம் கொடுக்காததால் இரு தடவைகள் பிடிவிறாந்து பிறப்பிக்கப்பட்டிருந்த உடுகம்பொல, நாட்டிலிருந்து களவாக இந்தியாவுக்கு ஒளித்தோடி மறைந்திருந்துவிட்டு, அதே பிடிவிறாந்து அமுலில் இருக்கும்போதே, எந்தப் பயமும் அற்று நாடு திரும்பியுள்ளார். வருவதற்கு முதல்நாள் ஜனாதிபதியுடன் தொலைபேசியில் பேசிவிட்டு வந்த அவருக்கு விமான நிலையத்தில் எந்தவிதமான சோதனையும் இன்றி வரமுடிந்தது. இது உயர் நீதிமன்ற உத்தரவுகள் ஜனாதிபதியின் கட்டளைக்கு கீழ்ப்பட்டவை என்று காட்டுகின்றனவா அல்லது உடுகம்பொலவுக்கும் முன்னாள் ஜனாதிபதிக்குமிடையிலான தனிப்பட்ட தகராறுக்கு உயர் நீதிமன்றம் துணை போனது என்று காட்டுகிறதா என்ற சந்தேகத்தை கிளப்பியுள்ளது!

நீதித்துறையின் சுயாதீனம் பற்றி வாய் கிழியப் பீற்றும் அரசு இதைப் பற்றி என்ன சொல்லப் போகிறது? ஏற்கெனவே இவ்வாறுதான் முன்னாள் நிதியமைச்சர் றொனி டி மெல்லின் மீதான வழக்குகள் கைவிடப்பட்டன. இப்போது உடுகம்பொலவின் வழக்குகளும் அரசால் வாபஸ் பெறப்பட்டாலும் ஆச்சரியமில்லை.

நாட்டின் ஆளும் கட்சிக்கும் அரசுக்கும் ஏற்ற விதத்தில் எதை வேண்டுமானாலும் செய்ய முடியும் என்பதற்கு இதைவிடச் சிறப்பான உதாரணங்கள் வேறென்ன வேண்டும்?

▦ ▦ ▦

அண்மையில் நடைபெற்ற மாகாணசபை தேர்தலில் மத்திய மாகாணத்தில் தமது மலையக மக்கள் முன்னணியின் சார்பில் போட்டியிட்டு வென்ற அதன் தலைவர் சந்திரசேகரன் அவர்கள் சத்தியப் பிரமாணம் செய்வதற்கு இன்னமும் அனுமதிக்கப்படவில்லை. கூட்டுப்படை தலைமையக குண்டு வெடிப்பு சந்தேக நபரான வரதனைப் பாதுகாத்தது, அவருக்கு உதவியது என்ற குற்றச் சாட்டுகளின் பேரில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருக்கும் அவர் மீது இன்று வரை எத்தகைய விசாரணையையும் அரசு ஒழுங்காக நடாத்தவில்லை. இப்போது அவர் மாகாணசபைக்குத் தெரிவுசெய்யப்பட்ட பின்பும் அவரை சத்தியப் பிரமாணம் செய்ய அனுமதிக்கவில்லை.

இப்படித்தான் பாராளுமன்றத்திற்குத் தெரிவுசெய்யப்பட்ட குட்டிமணி 1983 இல் சிறையில் இருக்கும் போதே கண்கள் தோண்டப்பட்டு கொல்லப்பட்டார்.

தமது அரசியல் லாபங்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

களுக்காக எத்தகைய குற்றச்சாட்டுள்ளவரையும் எவ்வித தடங்கலும் இன்றி விடுதலை செய்யவும், எத்தகைய குற்றங்களையும் உருப்படியாகச் சாட்ட முடியாதவர்களைத் தொடர்ந்து தடுப்புக் காவலில் வைத்திருக்கவும் வாய்ப்பாக ஒரு நீதித்துறை இருக்கிறது ஸ்ரீலங்காவில்! அதற்கு ஒரு தலையீடுமற்ற சுயாதீனத் தன்மை இருப்பதாக எழுதப்பட்டிருக்கிறது அரசியல் சட்டத்தில்!!

நாட்டின் சட்டத்தை மீறுகின்ற முதல் குற்றவாளிகளாக இன்றுவரை இருந்துவருகிற ஜனாதிபதிகள் மீது நடவடிக்கை எடுக்க இந்த நீதிமன்றங்களையா நம்புவது?

புலிகளுடைய தடுப்புக் காவலில் யுத்தக் கைதிகளாக இருந்த பொலிஸ்காரர்களை விடுவிப்பதற்கான பேரத்தில் புலிகள் புதிய நிபந்தனைகளை விதித்து வருவதாக அரசு அறிவித்ததுடன், கைதிகளை மீளப் பெறும் நடவடிக்கையை தற்காலிகமாக நிறுத்தி வைத்துள்ளது. ஏற்கெனவே பருத்தித்துறையில் இறக்கப்பட்டுக் கொண்டிருந்த உணவுப் பொருட்கள் மற்றும் பாவனைப் பொருட்கள் இறக்குவதைத் திடீரென நிறுத்தி அவற்றைத் திரும்பவும் கப்பலில் ஏற்றி காங்கேசன்துறைக்கு அனுப்பியுள்ளது அரசு.

கைதிகளை திரும்பக் கையளிக்கவெனப் புலிகள் குறிப்பிட்ட நிபந்தனைகளில் முக்கியமானவை, குடாநாட்டுக்கு எடுத்துச் செல்லத் தடைசெய்யப்பட்ட பொருட்களை (சைக்கிள், தீப்பெட்டி, மண்ணெண்ணை, பெற்றோல், சவர்க்காரம், விவசாய இடுபொருட்கள், அப்பியாசக் கொப்பிகள் முதலியன) மீள எடுத்துச் செல்லலாம் என்று அறிவிப்பது (வர்த்தமானி மூலம்), இதற்கு முதற்படியாக, இவற்றில் சிலவற்றை முதலிலேயே கொண்டு சென்று செஞ்சிலுவைச் சங்கத்தின் மேற்பார்வையில் இயங்கும் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள பருத்தித்துறை துறைமுகத்தில் இறக்குவது என்பனவாகும்.

அரசு இந்த விடயத்தில் தனது நரித் தந்திரத்தைப் பயன்படுத்த முனைந்தது. கேட்டுக் கொண்டபடி பருத்தித்துறைக்கு ஒரு கப்பலில் பொருட்களை அனுப்பியது. அதை அனுப்பியதும் பொலிஸாரை மீளப் பெற்றுக்கொண்டு புலிகளுக்கு முழங்கையைக் காட்டவென முடிவு செய்தது. ஆனால், புலிகளோ முதலில் அவ்வளவு உறுதியாகப் பேசாவிட்டாலும் நிரந்த






தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ரத் தடை நீக்க வர்த்தமானி அறிவிப்பை வலியுறுத்தி வந்தனர்.

ஏற்கெனவே தற்காலிகமாகத் தளர்த்தப்பட்ட தடை உத்தரவின்படி வவுனியாவிலிருந்து பொருட்களை வாங்கிச் சென்றவர்களை ஒருநாள் அனுமதித்து விட்டு மறுநாள் இராணுவத்தினர் அனுமதிக்க மறுத்துவிட்டனர். தமக்கு உத்தரவு வரவில்லை என்று அவர்கள் கூறினர். ஆனால் உண்மையில் இராணுவத்தினரே இப் பொருட்கள் கொண்டு செல்லப்படுவதை உறுதியாக எதிர்த்தார்கள். புலிகளின் பலத்தை அதிகரிக்கக்கூடிய் இந்த நடவடிக்கையைத் தாம் ஏற்க முடியாது என்று அவர்கள் கூறினர். இது அரசுக்கு நெருக்கடியை ஏற்படுத்தியதால், அரசு கைதிகளை பெற்றுக் கொள்ளும் முயற்சியைத் திடீரெனக் கைவிட்டது.

கைதிகளைப் பார்க்கச் சென்ற உறவினர்கள் யாழ்ப்பாணத்தில் இருக்க, அரசு தனது ஏமாற்று வேலை பலிக்காததால், புலிகள் தம்மை ஏமாற்ற நினைப்பதாக அறிவித்துள்ளது.

கொழும்பு பத்திரிகைகளும் இதையே சொல்லிக் கொள்கின்றன.

உண்மையில் இத்தகையதொரு கைதிகளை விடுவிக்கும் முயற்சியில் மனிதாபிமானத்திற்கு மேலாக அரசியல் லாபப் போட்டியே முன் நிற்கிறது.

புலிகளின் கோரிக்கையில் அரசியல் லாபமும் அடங்கியிருந்த போதிலும், குடாநாட்டுக்கான விநியோகக் கோரிக்கையில் உள்ள மனிதாபிமான அம்சத்தை யாரும் மறுத்துவிட முடியாது!

அரசு புலிகளை காரணம் காட்டி வடக்கு முழுவதையும் பட்டினி போடுவதற்கு எடுத்துவரும் முயற்சியை இந்த 33 பொலிஸாருக்காக விட்டுக் கொடுக்கும் என்று யாரும் நம்பத் தயாரில்லை.

இதனால் இப் பொலிஸாரை பார்க்க வென யாழ் போன உறவினர்களும் திரும்பி வர மறுத்து அங்கேயே தங்கி விட்டார்கள்.

கொழும்பு அரசியல்வாதிகளும், பத்திரிகைகளும் விரைவில் புலிகள் அவர்களையும் பணயம் வைத்துள்ளதாகக் கூறினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை!

பிரஜைகள்
(ஈழம்)

[ 5 ஆம் பக்க தொடர் ]

- எனும் பாடல் வரியும் போராளிகளின் மனத்தை ஆழமாகத் தைத்தன.

இதே காலப் பகுதிகளில் எம்.ஏ.நுஃமானின் அறிமுகத்தில் பாரதியாரின் கவிதைகள் கவிதா நிகழ்வு எனப் பெயரிட்டு நுஃமான், சேரன், ஆதவன் ஆகியோரால் யாழ் றிம்மர் மண்டபத்தில் நிகழ்த்தப் பட்டது. கவியரங்கத்திற்கு மாற்றாக, பாரதியாரின் ஒரு கவிதையையே மூவரும் ஏற்ற இறக்கங்களுடன் மாற்றி மாற்றி வாசிப்பதினூடாக கவிதை தாக்கத்தைக் கொடுத்தது. இன்னொரு பரிணாமத்தை எய்தியது. இது புதுவடிவம் எனலாம். ஆனால் இதனை நிகழ்வு என்று சொல்வது கேள்விக்குரியது. இங்கு கவிதை மாறி மாறி வாசிக்கப்பட்டதேயொழிய, ஒன்றும் நிகழ்த்திக் காட்டப்படவில்லை.

இதே வடிவத்தைக் கொண்டு தேசிய இனப் பிரச்சினை தொடர்பான அரசியற் கவிதைகளை சேரன், அ.ரவி, விஜயேந்திரன், சபேசன் போன்றோர் கவிதா நிகழ்வாக கிராமம் கிராமமாக நிகழ்த்தினார்கள். வரவேற்பு இருந்தது.


[ தொடரும் ]

அ.பாபுராம் (ஈழம்)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# மறுபடியும்

தன் முயற்சியில் சற்றும் மனம் தளராத விக்கிரமாதித்தன் மீண்டும் தமிழ்ப்படம் ஒன்றைப் பார்த்தான். படத்தின் பெயர் "மறுபடியும்". கதை, வசனம், டைரக்ஷன் ஒளிப்பதிவு பாலுமகேந்திரா. நடிகர்களாக ரேவதி, நிழல்கள் ரவி, ரோகினி மற்றும் சிலர்.

சட்டபூர்வமாக ஒரு பெண்ணைத் திருமணம் செய்திருந்த சினிமா இயக்குநர் இரகசியமாகவும் ஒரு நடிகையுடன் கணவனாக உறவு வைத்திருக்கிறார். நிர்ப்பந்தத்தினால் இரகசியம் அம்பலமாக, கணவனைப் பிச்சை கேட்டு ஏமாற்றமடைந்த சட்டபூர்வ மனைவி தனித்து தனது சொந்தப் பலத்தில் வாழ்கிறாள். தற்செயலாக கிற்றார் வாத்தியக் கலைஞன் ஒருவன் அவளைச் சந்தித்து ஆதரவு காட்டி பின்னர் காதலிக்கிறான். மனநோயாளியான நடிகையோ இயக்குநரை நம்ப மறுத்து அவரைச் சட்டபூர்வமாகத் திருமணம் செய்வதையும் மறுத்து வெளியேற்றுகிறாள். அங்கு இடமில்லாததால் தனது முன்னாள் மனைவியிடம் திரும்பி வரும் இயக்குநர் தன்னை ஏற்றுக் கொள்ளும்படி கேட்க அவள் அதை நிராகரித்ததுடன், கிற்றார் இளைஞனின் காதலையும் மறுத்து, தங்கள் வீட்டில் முன்னர் வேலை செய்த பெண்ணின் அநாதரவாகிப் போன குழந்தையுடன் வாழ்க்கையின் அடுத்த கட்டத்திற்குப் போகிறாள்.

படம் முடிந்ததும் விக்கிரமாதித்தன் செற்றிக்கு அடியில், பாத்ரூமில், குசினியில் என்று எல்லா இடமும் தேடிப் பார்த்தான். வேதாளத்தைக் காணவில்லை. அப்பாடா சனியன் விட்டது என்ற நிம்மதிப் பெருமூச்சுடன் சமையற் பொருட்கள் வாங்குவதற்காக வீட்டை விட்டு வெளியே வந்தான்.

சிறிது தூரம் வந்ததுமே பழக்கமான குரலில் சிரிப்புச் சத்தம் கேட்டது. விக்கிரமாதித்தன் சுற்றும் முற்றும் பார்த்தான். யாரையும் காணவில்லை.

"நான் பைக்குள்ளே இருக்கின்றேன்" என்ற வேதாளத்தின் குரல் கேட்டு பையைத் திறந்தான். அங்கே வேதாளம் சிறிய உருவத்தில் குந்தி இருந்தது.

"என்ன விக்கிரமாதித்தா, படம் பார்த்து முடித்த பின்பு என்னைக் காணவில்லை என வருந்தியிருப்பாயே?" என்று வேதாளம் கேட்க, விக்கிரமாதித்தன் எரிச்சலுடன் "ஓமோம்." என்றான்.

"படம் எப்படி?"

"நல்ல படம் ஒண்டைக் கனகாலத்துக்குப் பிறகு பாத்த திருப்தி"

"அப்படி என்ன இருக்கின்றது அத் திரைப்படத்தில்?"

"கமராக் கோணங்கள், அளவான பாத்திரங்கள், கதை சீராய் போறது, அடக்கமான இசை, அளவான வசனங்கள், நடிப்பு.. என்டு கனக்க சொல்லலாம்"



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

"நீ நன்றாக மயங்கிவிட்டாய் போல் தெரிகிறது. வழக்கமாக தமிழ்ப் படங்களில் குறை காண்கின்ற உனக்கு இன்று என்ன நடந்துவிட்டது?"


"குறை இருந்தா சொல்லத்தான் வேணும். அதுக்காண்டி குறை சொல்ல மட்டுந்தான் தெரியும் எண்டு நினைக்காதை. நல்லதை நல்லதெண்டு சொல்லவும் தெரியும்"

"உணர்ச்சிவசப்படாதே விக்கிரமாதித்தா. கதையைப் பற்றிக் கூறு"

"கணவனே கண்கண்ட தெய்வம், கல்லானாலும் கணவன், புல்லானாலும் புருசன், பொம்பிளையள் தனிச்சு வாழ முடியாது, பொம்பிளையளுக்குக் கட்டாயம் ஆண் துணை தேவை எண்ட எல்லாத்தையும் போட்டுடைச்சிருக்கு. பலசாலியான பொம்பிளை சமுகத்தாலைதான் ஊனமாக்கப் பட்டிருக்கிறாள் எண்டதும் காட்டியிருக்குது. குடும்பப் பிரச்சினையிலை பொம்பிளையள் தங்கடை சுயபலத்திலை முடிவெடுக்க வேண்டினதையும், கலியாணம், கணவன், காதல் மட்டுந்தான் வாழ்க்கையெண்டில்லை எண்டதையும் காட்டியிருக்குது"

"நிறுத்து. தொடர்ந்து புகழ்ந்து கொண்டே போகிறாய். இத் திரைப்படம் 'அர்த்' என்ற ஹிந்திப் படத்தின் அப்பட்டமான பிரதி என்று கதைக்கின்றார்களே?"

"இதைத் தெரிவிக்காத நேர்மையீனம் பாலுமகேந்திராவிட்டை இருக்கிறதோடை, சொந்தப் படைப்பும் வத்திப்போச்சு எண்டு தெரியுது. எண்டாலும், கொப்பியடிச்சாலும் கூட, கதறக் கதறத் தன்னை அநாதரவாகக் கைழுவிய கணவன் திரும்ப வந்து மன்னிப்புக் கேட்கும்போது அதை ஆணித்தரமாக நிராகரிக்கும் தமிழ்ப் பொம்பிளையை தமிழ்ப் படத்திலை காட்டின பாலுமகேந்திராவைப் பாராட்டத்தான் வேணும். பொம்பிளையளின்ரை ஒட்டுமொத்தமான பிரச்சினையளுக்கோ அல்லாட்டி வறுமையிலை வாடுற பொம்பிளையளுக்கோ தீர்வைச் சொல்லயில்லையெண்டாலும், மிடில்கிளாஸ் பொம்பிளையள் மீதான கருத்து ரீதியான ஒடுக்குமுறையை பாலு தைரியமாய் எதிர்த்திருக்கிறார். இயக்குநர் வீட்டிலை வேலை செய்யும் பொம்பிளை மூலமாயும், இயக்குநரைப் பிரிஞ்சாப் பிறகு அவற்றை மனிசி தங்கின விடுதியிலை இருக்கிற பொம்பிளை மூலமாயும் ஆம்பிளையளின்ரை வக்கிரங்கள் உரிச்சுக்






தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

காட்டப்பட்டிருக்கு"

"பெண்ணுக்குத் தைரியம் ஊட்டுவதாகச் சொல்கின்றாய். கணவரை நிராகரித்தவள் தங்கள் வீட்டுத் தொழிலாளியின் மகளுக்காக வாழ்வதாகக் கூறுகிறாளே. இது பெண் என்பவள் தியாகம் செய்ய வேண்டும். மற்றவர்களுக்காகவே வாழவேண்டும் என்ற மரபுவழிக் கருத்துத் தானே?"

"அப்பிடி ஒரேயடியாய் சொல்லேலாது. தனிச்சு வாழுறது எண்டது தன்ரை சொந்தப் பலத்தை நம்பி வாழுறதே ஒழிய ஆக்களேயில்லாத ஒரு தீவிலை போய் இருக்கிறதெண்டதில்லை. அவள் தன்னை அழிச்சு அந்தக் குழந்தையை வளக்கிறதாய் சொல்லேலை. குழந்தை வளர்றதுக்கான பொருளாதாரம் அவளிட்டை இருக்குது. அவளுக்கு உறவென்று அந்தக் குழந்தை இருக்குது. ரெண்டு பேரும் சேந்து சீவிக்கப் போகினம். இதிலை எங்கை தியாகம்? ஆனா.."

"என்ன இழுக்கின்றாய் விக்கிரமாதித்தா?"

"படத்திலை வாற எல்லாப் பாட்டிலையும் கடவுளை நம்பச் சொல்லிப் பாலுமகேந்திரா சொல்லுறார். கடவுள்தான் பிரச்சினையைத் தீர்ப்பாராம். விதிப்படிதான் எல்லாம் நடக்குமாம். படத்தின்ரை கதையிலை இருக்கிற நடைமுறையும். பாட்டுகளிலை இருக்கிற கற்பனையும் ஒண்டுக்கொண்டு முரணாயிருக்குது. மற்றது நடிகையின்ரை நடனம். உடுப்பை ஒரேயடியாக் குறைக்காம ஓரளவுக்குக் குறைச்சுக் காட்டினாலும் சனங்கள் ஏற்பினமாம். மூன்றாம் பிறையிலை சில்க்குவை வடிவாய் காட்டினவர்தானே! மற்றது நடிகை நோயாளியாக இல்லாமலிருந்திருந்தால் கதை எப்பிடிப் போயிருக்கும் எண்டதும் கேள்விதான்"

அருகாமையில் சிரிப்புச் சத்தம் கேட்டு விக்கிரமாதித்தன் கதைத்துக் கொண்டிருந்ததை நிறுத்திவிட்டுப் பார்த்தான். அவன் முன்னால் இரண்டு ஜேர்மனிய ச் சிறார்கள் அவன் பையுடன் கதைப்பதைப் பார்த்துச் சிரித்துக் கொண்டிருந்தார்கள்.

லட்சுமணா

## விஞ்ஞான வாழ்க்கை

விஞ்ஞானமும் வேகமும்
விவேகத்தோடு எப்படிச் சேர்ந்தது?

இன்றைய பேச்சும் நாளை
சுருக்காய் கழுத்துமுன்...
நாளைய உண்மை வேறாய் இருப்பதால்
அளந்து பேசி,
தீர்மானித்து,
பயந்து வாழ்ந்து,
மனிதன் தேய்ந்து போனது
தெரிகிறதா உங்களுக்கு?

காலை வேலைக்குப் போகவேண்டும்
என்ற தீர்மானத்தை
கடிகாரத்திடம் கொடுக்க
விஞ்ஞானத்தை வளர்த்தவன்
இயல்பைவிட்டு எழுந்து
வேலைக்குப் போய் தேய்ந்து போகவா?
விவேகத்தை எங்கே விட்டான்?
மதியத்தில் விட்ட மூச்சு - பின்
மாலையில் வீடு வந்துவிட்டால் மூச்சு!
இயந்திரமும் வெளிமூச்சும்
எங்களை ஏன் சுடுகிறது?

தேவன்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# அன்று கூட்டணி, இன்று புலிகள், நாளை...?

## அரசியல் அநாதைகள் ! பிரபா சொன்னால் கொலை !! மக்கள் துன்பம், புலிகள் சுகபோகம் !!!

*[சென்ற இதழ் தொடர்..]*

புலிகளின் வரலாற்று ரீதியான வழிகாட்டியாக, வீரம் செறிந்த போரை நடத்திய பண்டைத் தமிழ் மன்னர்களே விளங்குகின்றனர். பண்டாரவன்னியன், ராஜராஜசோழன், சங்கிலியன் போன்றோரே இந்த வகையில் இவர்களின் முன்னோடிகளாவர். புலி உறுப்பினர்கள் தங்கள் தலைவரையும், இம் மன்னர்களைப் போன்று வீர சாகசம் செய்பவராகப் பார்க்கின்றனர். இவர்களின் ஆரம்பகாலப் பெயர்களும், புலிச் சின்னமும் இவற்றின் வெளிப்பாடே. பிரபாகரனின் ஆரம்பகாலப் பெயர்களில் முதன்மையானது கரிகாலன்!

### சுத்த இராணுவக் கண்ணோட்டம்:

ஒரு அமைப்பின் இராணுவம் என்பது அவ்வமைப்பின் அரசியல் நிலைப்பாட்டை பாதுகாக்கின்ற ஒரு கருவி என நோக்காமல், இராணுவமே எல்லாம் என நோக்குதலே சுத்த இராணுவக் கண்ணோட்டமாகும். இச் சுத்த இராணுவக் கண்ணோட்டம் மக்கள் யுத்தப் பாதையை முழுமையாக நிராகரிக்கின்றது. இராணுவத்தினால் எல்லாவற்றையும் சாதித்து விடலாம் என்ற எண்ணக் கருவை வளர்த்து விடுகின்றது. ஒரு இராணுவத்தைப் பலமாகக் காட்டி அரசுக்கு எதிராக போராடுவதன் மூலம் அரசை வீழ்ச்சியடையச் செய்யலாம் என நம்புகின்றது. இது நவீன கால அரசுகள், அரசு இயந்திர முறைகள் பற்றிக் கவனிப்பதில்லை.

பரந்துபட்ட மக்களை அரசிடமிருந்து அந்நியப்படுத்தி, அரசியல் உணர்வூட்டி, ஆயுதபாணிகளாக்கி போராட வைப்பதன் மூலம் பலம் பொருந்திய அரசை வீழ்த்த முடியும். அரசை மக்களிடமிருந்து அந்நியப்படுத்துவதற்கு அதனைத் தொடர்ச்சியாக அம்பலப்படுத்துதல் அவசியமானதாகும். மக்கள் யுத்தப் பாதையை மேற்கொள்பவர்கள் இதனையே முதலில் மேற்கொள்ள வேண்டும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மக்கள் யுத்தப் பாதை வழிமுறையை 3 கட்டங்களாக வகுக்கலாம். தற்காப்புக் காலகட்டம், தாக்குதல் கட்டம், எதிரியை முற்றாக அழித்து விரட்டி அதிகாரத்துவத்தை நிலைநாட்டும் கட்டம் என்பனவே அம் மூன்று கட்டங்களுமாகும்.

தற்காப்புக் கட்டத்தில் மக்கள் அரசியல் ரீதியாக திரட்டப்படுவர். இக் கட்டத்தில் பிரதான ஆயுதப் போராட்ட வடிவமாக மக்களிடமிருந்து கெரில்லாக் குழுக்களைக் கட்டி அரசுக்கு எதிரான தாக்குதல் நடாத்துதல் அமையும். இது தாக்கிவிட்டு ஓடும் போர்த் தந்திரமாகும். இத் தாக்குதலினால் எதிரியின் படை நிலைகுலையும்.

இவ்வாறு நிலைகுலையும் இடங்களாகப் பார்த்து அடுத்த தாக்குதல் கட்டத்திற்கு முன்னேற வேண்டும். தாக்குதல் கட்டத்தின் போது கெரில்லாக் குழுக்களுக்குப் பதில் நிரந்தரப் படைகள் உருவாக்கப்படும். எதிரியிடமிருந்து பல பிரதேசங்களை விடுவிப்பதும், பாதுகாப்பதும், அப் பகுதிகளில் மக்கள் அதிகாரங்களை நிறுவுவதும் ஆரம்பிக்கப்படும். இவ்விடத்தில் பிரதேசங்கள் பாதுகாக்கப்பட்டு மக்களின் புதிய வாழ்வுக்கு இராணுவம் ஒத்துழைப்பதுடன், மக்கள் முழுமையாக ஆயுதபாணிகளாக்கப்பட்டு எதிரியின் மீள் நுழைவுக்கு எதிரான தற்காப்பு/தடுப்பு யுத்தங்கள் மேற்கொள்ளப்படும்.

எதிரியை முற்றாக விரட்டி, சொந்த அதிகாரத்தை நிலைநாட்டுவது மூன்றாவது கட்டமாகும்.

முதலாம் கட்டத்தையும் இரண்டாம் கட்டத்தின் ஆரம்பத்தையும் வேண்டுமானால் மக்களைப் போராட்டத்தில் ஈடுபடுத்தாமல் உணர்வூட்டப்பட்ட வீரர்களைக் கொண்டே தாண்டி விடலாம். ஆனால் இரண்டாவது கட்டத்தின் இறுதி நிலையையும், மூன்றாவது கட்டத்தையும் மக்களின் பங்குபற்றலின்றி தாண்டிவிட முடியாது.

எமது போராட்டம் இரண்டாவது கட்டத்தின் இறுதிவரை வந்திருந்தது. ஆனால் துரதிஷ்டம் மக்கள் யுத்தமாக மாறாததினால் மூன்றாவது கட்டத்திற்குச் செல்ல முடியவில்லை. மூன்றாவது கட்டத்திற்குச் செல்ல வேண்டுமானால் அனைத்துத் தேசிய சக்திகளும் இணைக்கப்பட்டிருக்க வேண்டும். மக்கள் இராணுவமயமாகி இருக்க வேண்டும். எமது போராட்டத்தில் இது நடைபெறவில்லை. இதனால் போராட்டத்தினால் தடுப்பு யுத்தத்தைக் கடந்து அப்பால் செல்ல முடியவில்லை.

புலிகளின் யுத்த ரீதியிலான முன்னேற்றம் அவர்கள் கொண்டிருந்த அரசியல் நிலைப்பாடு காரணமாக முழுமையான யுத்தமாகப் பரிணமிக்க முடியவில்லை. தமிழீழ விடுதலையில் மக்களை ஐக்கியப்படுத்தி ஈடுபடுத்த வேண்டிய தேவை கூட்டணியால் பிரச்சாரம் செய்யப்பட்ட அரசியலுக்கு அவசியமில்லை. அதன் வழி தொடர்ந்ததால் புலிகளின் 'பின்னால்' மக்கள் நின்றார்களே ஒழிய போராட்டத்தை நடத்துபவர்களாக மாறிவிடவில்லை. புலிகளின் அரசியல் இவ் வேளையில் தேசிய சக்திகளிடையேயான முரண்பாட்டையும் இராணுவ ரீதியில் தீர்க்க முயன்று நிலைமையை மேலும் சீரழித்தது.

புலிகள் மக்கள் யுத்தப் பாதையைக் கடைப்பிடித்திருந்தால் தம்மால் விடுவிக்கப்பட்ட பிரதேசங்கள் முழுவதையும் தக்க வைத்திருக்க முடிந்திருக்கும். எதிரியை இன்னும் இன்னும் விரட்டியிருக்க முடியும். மூன்றாவது கட்டத்தை நோக்கியும் முன்னேறியிருக்க முடியும்.

சுத்த இராணுவவாதம் மக்களிடையே ஆதிக்கம் செலுத்தும் அரசியலை கணக்கிலெடுப்பதில்லை. அது இராணுவ பலத்தில் முழுதாக தங்கி நிற்கிறது. மேலும் அது எல்லாப் பிரச்சினைகளையும் இராணுவ



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ரீதியிலேயே கையாள முடியும் என்று கருதுகிறது.

மக்களிடம் ஏற்கெனவே ஆதிக்கம் செலுத்திய கூட்டணியின் அரசியல், புலிகளின் இராணுவ வாதத்தினை விமர்சனமின்றி ஏற்கக் கூடியதாக இருந்தது. ஆனால், இந்த இராணுவ வாதம் 1987 இல் வடமாராட்சி ஒப்பிரேசனில் படுதோல்வி கண்டபோது, ரெலோவும், ஈ.பி.ஆர்.எல்.எவ். வும் அழிக்கப்படாமல் இருந்திருந்தால் இந் நிலை தோன்றியிருக்காது என்றே மக்களைச் சிந்திக்க வைத்தது. ஆனால் உண்மையில் இம் முடிவும் கூட சுத்த இராணுவ வாதத்தின் பாற்பட்டதே. ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எவ் அழிப்பு நடக்காமல் இருந்திருந்தால் கூட மக்களது அரச அதிகாரத்தினைப் பற்றியோ, விடுதலைப் பிரதேசங்கள் தமிழீழத்தின் முதற் படிக்கல் என்றோ, அவற்றைப் பாதுகாப்பது ஒவ்வொரு தமிழ் மக்களினதும் கடமை என்றோ மக்கள் மத்தியில் அரசியல் விழிப்புணர்வு ஏற்படுத்தப் படவில்லை. அரசியலின் - மாற்று அரசியலின் - அடிப்படை உணரப்படாமலேயே தமிழ் இலட்சியவாதிகள் பெற்றதை, தாங்களே பறி கொடுத்ததை தமக்குச் சம்பந்தமல்லாத ஒன்றாக - ஒருவகை விமர்சனப் பார்வையுடன் - மக்கள் சும்மா பார்த்துக் கொண்டிருந்த காலமாக அந்தக் காலம் போய் முடிந்தது!

## தனிநபர் பயங்கரவாதம்:

தேசத்தை உலுக்கிய சுந்தரம் கொலையிலிருந்து அண்மைய ராஜீவ் காந்தி கொலைவரையான (சுந்தரத்திற்கு முன்பும் பல நிகழ்ந்துள்ளன!) அனைத்துத் தனிநபர் கொலைகளினதும் பின்னணியாக அமைவது இக் கோட்பாடே ஆகும். தனிநபர்களை கருத்துகளின், சமூகப் போக்குகளின் பிரதிநிதிகளாக அல்லாமல் இப் போக்குகளும், கருத்துகளும் இத் தனி மனிதரினால் உருவாகுபவையே எனக் கருதும் போக்காகும் இது. இயக்கவியல் வரலாற்றை தலைகீழாக புரிந்து கொண்டிருக்கும் இப் போக்கு, தனிநபர்களை அழித்து விட்டால் போக்குகளை அழித்துவிடலாம் எனக் கருதுகிறது. கருத்தொருமை வாதத்துடன் இணைந்து தனிநபர் பயங்கரவாதம் வெளிப்படும்போது பல ஆபத்தான நிலமைகள் உருவாகி விடுகின்றன.




தனிநபர் பயங்கரவாதம் வரலாற்றில் மக்களின்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பங்கைவிட தனிநபர்களின் பங்கை உயர்த்தி மதிப்பிடுகிறது. தனிநபர்களின் பங்கு எவ்வளவுதான் உயர்வானதாயினும் அது எழுந்து வரும் போக்கின் பிரதிநிதி என்ற அளவிற்கு மேல் பெரியது அல்ல என்பது கவனிக்கப்படுவதில்லை. ஏற்கனவே நடப்பிலுள்ள சமூகக் கருத்துகள் தனிநபர்களை முதன்மைப்படுத்தி உருவாக்கப்பட்டவையாக அமைந்துள்ளதும், வரலாறுகள் அவ்வாறு தொகுக்கப்பட்டுள்ளதும் ஆன ஒரு சூழலில் இச் சிந்தனை இயல்பான ஒன்றே.

புலிகளின் இன்றுவரையான எந்தத் தனிநபர் கொலையும் புலிகள் நினைத்ததைச் செய்யவில்லை என்றே சொல்ல வேண்டும். துரையப்பா முதல் எத்தனை அரசியல் 'துரோகிகள்' கொல்லப்பட்ட பின்னும் இன்றுவரை ஒரு கனேசலிங்கமும், திருமதி புலேந்திரனும், டக்ளஸ் தேவானந்தாவும் உருவாகிக் கொண்டுதான் இருக்கிறார்கள். புலிகளால் எத்தனையோ பேருக்கு மின்கம்பத் தண்டனை வழங்கப்பட்ட பின்பும் இன்றுவரை களவும், பாலியற் பலாத்காரமும், காட்டிக் கொடுப்பும் நடந்துகொண்டுதான் இருக்கின்றன.

தனிநபர் பயங்கரவாதம் பிறர் மீது குறை காண்கிறது; தம்மை சமூகத்தில் நிலைப்படுத்திக் கொள்வதற்காக தம்மை ஆய்வு செய்வதற்குப் பதிலாக சமூகத்தை தமக்கேற்ப மாற நிர்ப்பந்திக்கிறது. தனிநபர்களைக் கொல்வதன் மூலம் இதைச் சாதித்துவிட முயல்கிறது. இது கருத்தொருமை வாதத்துடன் இணைகையில் வரலாற்றின் சரியான, தவறான போக்குகள் தெளிவாக இனங்காணப்பட முடியாதளவிற்கு நிலமையை மோசமாக்கி விடுகிறது. புலிகளின் தொடர்ச்சியான படுகொலைகள் புலிகள் அமைப்பை ஒரு மக்கள் விரோதப் போக்குள்ள அணியாக உருவாக்கி வந்துளளதே அல்லாமல் சமூகத்தில் பெரிய மாற்றம் எதையும் செய்துவிடவில்லை.

புலிகளின் இத் தவறுகள் அனைத்தினதும் தோற்றுவாயாக அமைந்தது அவர்கள் எந்தப் போராட்டத்திற்காகக் குதித்தார்களோ அதற்கான அவசியம் என்ன என்பதை ஆராயாமலே அதிலே குதித்ததுதான். தமிழரசுக் கட்சி மற்றும் தமிழர் விடுதலைக் கூட்டணியினூடாக அவர்களின் அரசியல் நோக்கங்களை நடைமுறைப்படுத்த உருவாக்கப்பட்ட இராணுவ அமைப்பானது கூட்டணியின் காட்டிக் கொடுப்பால் தனியாக இயங்கப் புறப்பட்டதால் ஏற்பட்ட துயர வரலாறுதான் இது. இது இன்றுவரை புலிகளை - அவர்கள் தமிழீழம் என்று சொலிக் கொண்ட போதும் - வெறும் தடுப்பு யுத்த எல்லைக்கப்பால் முன்னேற விடாமல் தடுத்து வைத்திருக்கிறது.

அடிப்படையில் மக்களது நலன்களுடன் முரண்பட்ட வர்க்க நிலை கொண்ட கூட்டணி மக்களையிட்டுப் பயந்தது. தமது நோக்கங்களுக்காக மக்கள் முட்டாள்கள் போல இயங்கும்வரை மக்கள் பங்களிப்பை அங்கீகரித்த கூட்டணி தமது நலன்களுக்கு ஏற்ற விதத்தில் அவர்கள் இருக்க வேண்டுமென்பதில் கவனமாக இருந்தது. 1977 தேர்தல் முடிந்ததும் கூட்டணி தமிழீழத்திற்காக செய்த முதல் வேலைத் திட்டம் இந்தியாவுக்கும், ஐரோப்பாவுக்கும் அமிர்தலிங்கத்தை அனுப்பி வைத்து இலங்கை அரசின் மீது நிர்ப்பந்தம் கொண்டு வர முயன்றதே! மக்களை கூட்டணி ஒருபோதும் நம்பியதில்லை. அவர்களை அது போராட அழைக்கவில்லை. தமக்கு வாக்குப் போடவே அழைத்தது.

அவர்களின் வேலையைத்தான் புலிகளும் செய்தார்கள். அவர்களும் மக்களை நம்பவில்லை. அவர்களையிட்டுப் பயந்தார்கள். அவர்களது ஜனனாயக உரிமைகளை மறுத்தார்கள். மக்களுக்கு ஜனனாயக உரிமைகள் வழங்கப்பட்டால் தாம் 'அரசியல் அநாதைகள்' ஆகிவிடுவோம் என்று

[தொடர் 33 ஆம் பக்கம்]



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# அருவி ஆசிரியருக்கு நடந்ததென்ன..?

கொழும்பில் தமிழ் இளைஞர், யுவதி களைக் கண்மூடித்தனமாகக் கைது செய்கி ன்ற பொலிஸாரின் நடவடிக்கை பெரும் கிலியை ஏற்படுத்தியுள்ளது. இதையிட்டுப் பத்திரிகைகளிலும், பாராளுமன்றத்திலும் கேள்விகள் எழுப்பப்பட்டு அதற்கான ஏதோ சமாதானங்கள் கூறப்பட்டுமுள்ளன. இந் நிலையில் இவ்வாறான வகையில் கைது செய்யப்பட்டவர்கள் சிலரைச் சந்தி த்து அவர்களது அனுபவங்களை எமது சஞ்சிகையில் பிரசுரிப்பதற்காக அப்படி நிகழ்ந்தவற்றைக் கூறுவதற்கு முன்வரக் கூடியவர்கள் உள்ளார்களா என்று தேடிக் கொண்டிருந்தேன். ஆனால் எனது அதிஷ் டம் - தமிழ் மக்களுக்குப் பீடித்த பொது வான துரதிஷ்டம், நானே கைது செய்யப் பட்டு அந்த "சுவையான" அனுபவத்தை விலாவாரியாக ஊட்டப்பெற்றேன். ஆம்! ஒரு பத்திரிகையாளனாக, பிரதம ஆசிரிய ராக இருந்தும், பத்திரிகையாளர் பொலி ஸாரால் தொல்லைப்படுத்தப்பட மாட்டார் கள், பொலிஸார் யாவரும் அறிவுறுத்தப் பட்டுள்ளார்கள் என்ற அரசாங்கத்தின் வெளிப்படையான உத்தரவாதத்திற்குப் பின்பும், வேறெந்தக் காரணத்திற்காகவு மல்ல, தமிழனென்ற ஒரே காரணத்திற்கா க நானும்தான் கைது செய்யப்பட்டேன்.

28.06.93 இரவு சுமார் 10.30 மணி. நான் சற்று நேரத்திற்கு முன்னர்தான் உணவருந்திவிட்டு அறைக்குத் திரும்பியிரு ந்தேன். வெளிநாட்டில் இருந்து வந்திருந் த எனது மைத்துனர் ஒருவருடன் கதைத் துக் கொண்டிருந்தேன். திடீரெனப் பொலி ஸார் உள்ளே நுழைந்தார்கள். இருவரை யும் மாறி மாறிக் கேள்வி கேட்டார்கள். பின்னர் எம்மை எமது அடையாள அட்டை களை எடுத்துக் கொண்டு தம்மோடு புறப் படும்படி சொன்னார்கள். நான் அவ்விடத் தில் அவர்களுக்குச் சொன்னேன், நான் ஒரு பத்திரிகை ஆசிரியர், பொலிஸார் பத் திரிகையாளரை தொல்லைப்படுத்த மாட்டா ர்களென்ற உத்தரவாதம் எமக்குத் தரப்பட் டுள்ளது, முன்னாள் அமைச்சரவைப் பேச் சாளராயிருந்த இன்றைய பிரதமர் ரனில் விக்கிரமசிங்கவே அப்படித் தெரிவித்திரு ந்தார், இது குறித்துப் பொலிஸாருக்கும் அறிவிக்கப்பட் டுள்ளதாக அவர் கூறியிருந் தார், அதனால் நீங்கள் இவ்வாறு என் னைக் கைது செய்வது என்று. அத்துடன் எனது அடையாள அட்டை, வேலை அட் டை என்பவற்றையும் காண்பித்தேன். ஆனால் அவர்களோ நான் கூறும் எதையு ம் காதில் வாங்கிக் கொண்டவர்களாகத் தென்படவில்லை. எம்மிருவரையும் கூட்டிச் சென்று ஜீப்பில் ஏற்றினர். நான் உள்ளே எமக்குக் காவலிருந்த பொலிஸாருக்கும் அதையே திரும்பச் சொன்னேன். அதை அவர்கள் உதாசீனம் செய்துவிட்டு தங்கள் பாட்டிற்கு இருந்தார்கள். பின்னர் அவ்வி டத்திலுள்ள சிங்கள நபரொருவருடன் மீதி ப் பொலிஸார் ஜீப்பில் ஏறிக்கொள்ள ஜீப் புறப்பட்டது. அந்த நபர் ஒரு ஒழுங்கையு ள் இட்டுச் சென்று ஏதோ ஒரு வீட்டைக் குறிப்பிட்டுவிட்டு முன்னரே இறங்கிக் கொள்ள, பொலிஸ் அந்த வீட்டிலிருந்தும் பல தமிழ் இளைஞர்களையும், பெண்களை யும் அழைத்து வந்து ஜீப்பில் ஏற்றினார்க



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ள். பெண்களைக் கைது செய்தபோது பெண் பொலிஸார் எவரும் வந்திருக்கவில்லை. ஜீப் பொலிஸ் ஸ்ரேஷனை அடைந்ததும் எம்மை அங்கிருந்தவர்களிடம் பொறுப்பளித்துவிட்டு எம்மைக் கூட்டி வந்தவர்கள் போய்விட்டார்கள்.

எம்மில் மொத்தமாக 22 பேர் இருந்தோம். அதில் 8 பேர் பெண்கள். அங்கு இரண்டு கூண்டுகள் இருந்தன. அதற்குள் ஏற்கெனவே சிலர் இருந்தார்கள். அக் கூண்டுக்குள் ஆண்களைப் போகச் சொன்னார்கள். பெண்களை கூண்டுகட்கு வெளியே இருந்த அறையில் வாங்குகளில் இருக்கச் சொன்னார்கள்.

அதன் பின்னர் யாவரையும் முன் அறைக்குக் கூட்டிச் சென்று பெயர், விலாசம் பதிந்தார்கள். பின்னர் எம்மைத் திரும்பவும் அழைத்து வந்து ஆண்களை அவ்விரு கூண்டுகளுக்குள்ளும், பெண்களை அதற்கு வெளியே இருந்த வாங்குகளிலும் விட்டார்கள்.

நான் இருந்த கூண்டு சுமார் 5 அடி அகலமும், 18 அடி நீளமும் கொண்டது. அதற்குள் 5 அடி அகலத்தில் ஒரு குந்த கட்டப்பட்டிருந்தது. உள்ளே ஏற்கெனவே நான்கு பேர் இருந்தார்கள். அத்துடன் என்னோடு சேர்த்து கொண்டுவரப்பட்டவர்கள் 5 பேர். மொத்தம் அதற்குள் 9 பேர். குந்தின் மேல் ஏற்கெனவே இருவர் படுத்திருந்தார்கள். கீழே எமக்கு குறுக்குப்பாட்டாகத்தான் படுக்க வேண்டும். சலம் கழிப்பதற்கு மூலையில் சிறிய துளை கொண்ட கட்டு ஒன்று உள்ளது. கூண்டு முழுவதும் ஒரே துர்நாற்றம் வீசியபடி இருந்தது. இரவு முழுவதும் அவ்வாறே நாம் கழிக்க நேர்ந்தது. பெண்களைப் பொறுத்தவரை மூதாட்டி ஒருவர் அவர்களைக் கவனிப்பதற்காக அமர்த்தப்பட்டிருந்தார்.

விடிந்ததும் நான் அங்கிருந்த பொலிஸாரிடம் அப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியை சந்திக்க வேண்டுமென்று கேட்டேன். அவர் இன்னும் வரவில்லை என்று கூறப்பட்டது. எனது உறவினர்களுக்கு தொலைபேசி மூலம் அறிவிக்க வேண்டுமென்று கேட்டேன். மறுக்கப்பட்டது. எனக்கு வெளியால் உள்ளவர்களுடன் தொடர்புகொள்ள எந்த வழியும் செய்து தரப்படவில்லை. அங்கு கைதிகளைப் பார்க்க வந்தவர்களிடம் மட்டும் எனக்கு வேண்டியவர்களுக்குத் தகவல் கொடுக்கும்படி கேட்டுக் கொண்டேன்.

சுமார் காலை 8.30 மணி போல் காலைக்கடன் முடிக்க எம்மை வெளியால் அழைத்துச் சென்று வந்தார்கள். அப்போது பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி வந்திருப்பதைக் கண்டு நான் அவரைச் சந்திக்க வேண்டுமென கேட்டேன். அதற்கு மறுத்துவிட்டார்கள். இதேவேளை எம்மோடு அழைத்துவரப்பட்ட மூவர் ஏதோ சிபார்சின் பேரில் விடுவிக்கப்பட்டனர்.

பின்னர் சுமார் 10.30 மணியளவில் எம் எல்லோரையும் அழைத்துச் சென்று கைரேகை பதிந்து வாக்குமூலம் எடுத்தார்கள். நான் மீண்டும் இவ்விடத்தில் அவர்கள் செய்வது தவறென்று கூறினேன். என்னிடம் வாக்குமூலம் பெற்றபோது நான் ஒரு பத்திரிகையாளன் என்று கூறியும்கூட என்னை உங்கள் அமைச்சரின் உத்தரவாதத்திற்கு மாறாக இவ்வாறு கைது செய்து வந்தது சரியா என்று வினாவினேன். அதற்கு அவர், பொதுவாக மேற்கொள்ளப்படும் கைது நடவடிக்கையில் உங்களையும் கைது செய்துள்ளார்கள் என்று காரணம் கூறினார். எனது வாக்குமூலம் சிங்களத்தில் பதியப்பட்டது. மொழி புரியாததால் அதில் என்ன எழுதப்பட்டுள்ளதென்பதைத் தெரிந்து கொள்ள முடியவில்லை.

நாம் மீண்டும் பழையபடி கூண்டுகளில் அடைக்கப்பட்டோம். பின்னர் அப்போது நான் சொல்லியனுப்பிய தகவல் ஒருவாறு கிடைக்கப்பெற்று என் உறவினர்கள் வந்து என்னைப் பார்வையிட்டனர். அவர்கள் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியிடம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பேசியதில் எம்மை சுமார் பி.ப. 1.30 மணி போல் நீதிமன்றத்திற்கு கொண்டு சென்று பிணையில் விடுவிப்பார்கள் என்றும், யாராவது பிணை எடுக்க வரவேண்டும் என்றும் கூறப்பட்டது.

சுமார் 1.00 மணிபோல் எம்மை அழைத்துச் சென்று படம் எடுத்தார்கள். ஆண்களைச் சேட்டைக் கழற்றி அரை வெற்றுடம்புடன் இலக்கத் தகடுகளைக் குறுக்காகப் பிடித்துப் படம் எடுத்தார்கள். பின்னர் யாவரையும் நீதிமன்றத்திற்கு கொண்டு சென்றார்கள்.

அங்கு ஆண் கைதிகளை ஏற்கெனவே வேறு இடங்களிலிருந்து அழைத்து வரப் பட்டிருந்த சிங்களக் கைதிகளிருந்த ஒரு கூட்டில் விட்டார்கள். அக் கைதிகளில் சிலர் எம்மை வெருட்டி எமது பைகளைத் துலவி பணம் பறிக்க முற்பட்டார்கள். சிலர் ஏற்கெனவே பணம் பறிகொடுத்துவிட்டார்கள். அதைக் கண்ட நாம் கூச்சலிட்டு சிறைக் காவலர்களை அழைத்து முறையிட்டோம். சிறைக் காவலர்கள் உடனே அவர்களை வேறு கூட்டிற்குள் பிரித்து விட்டார்கள். அதற்குள் இருந்த அவர்கள் எம்மை மகர சிறைச்சாலைக்கு வருவீர்களானால் கால்களை ஒடிப்போம் என்று மிரட்டிக் கொண்டிருந்தார்கள். எம்முடன் மீந்திருந்த வேறு சில சிங்களக் கைதிகள் களவாக உள்ளே தருவித்துக் கொண்ட போதைப் பொருட்களை அனுபவிப்பதில் ஈடுபட்டுக் கொண்டிருந்தார்கள். இவற்றிற்கு மத்தியில் நாம் சுமார் 4.30 மணிவரை இருந்து விட்டு பின்னர் நீதிமன்றத்திற்கு அழைக்கப்பட்டோம். அங்கு ஏற்கெனவே வந்திருந்த எமது உறவினர்கள் வழக்கறிஞர்கள் மூலம் ஒவ்வொருவருக்கும் தலா 750 ரூபா பிணை செலுத்தி எம்மை பிணையில் விடுவித்தார்கள். எமக்கு ஆடி 6ஆம் திகதி நீதிமன்றம் வரவேண்டுமென தெரிவிக்கப்பட்டது.

6.7.1993 அன்று எமது வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டது. 8 பெண்கள் உட்பட 19 பேரும் பெயர்கள் வாசிக்கப்பட்டு கூண்டில் ஏற்றப்பட்டு எவ்வித விசாரணையும் இன்றி "விடுதலை செய்யப்படுகிறீர்கள்" என்ற ஒரு வார்த்தையுடன் விடுதலை செய்யப்பட்டோம். எமக்கு எதிராகப் பொலிஸார் கொடுத்திருந்த விளக்கம் விஷேட சுற்றிவளைப்பொன்றில், கொழும்பில் ஏன் நிற்கிறீர்கள் என்ற சரியான காரணம் காட்டப்படாததால் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டார்கள் என்பதே. விடுதலை செய்தபோது "பயங்கரவாதச் செயற்பாட்டுடன் இவர்களுக்கு எந்தவிதச் சம்பந்தமும் இல்லை என்பதால் விடுதலை செய்யப்படுகிறீர்கள்" என்று நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

இன்றுவரை சுமார் 8,000இற்கும் மேற்பட்ட கொழும்பு வாழ் தமிழ் மக்கள் ஆண்கள், பெண்கள், பலதரப்பட்ட ஊழியர்கள், வயதானவர்கள், சுகவீனமானவர்கள் என்ற போதும் ஏதுமின்றி எழுந்தமானமாக கைது செய்யப்பட்டு இவ்வகை அனுபவத்திற்கூடாக சென்று வந்துள்ளார்கள். இவ்வனுபவம் இவர்களின் குறைந்த பட்ச வேதனை மட்டுமே. பலருக்கு இதைவிட மோசமான அனுபவங்களும் நிகழ்கின்றன. அவர்கள் பல நாட்கள் தடுத்து வைக்கப் பட்டிருக்கலாம். தாக்கப்பட்டிருக்கலாம். மேலும் உளவியல் ரீதியாகவும் பாதிக்கப் பட்டிருக்கலாம். இவர்கள் திடீரெனக் கைது செய்யப்படுவதினால் எவ்வளவோ முக்கிய, அவசர காரியங்கள் கைவிடப்பட்டிருக்கலாம். ஒரு வெளிநாட்டுப் பயணம் நின்றிருக்கலாம். திருமணம் பிற்போடப் பட்டிருக்கலாம். வேலைக்கான நேர்முகப் பரீட்சை ஒன்று தவறிப் போயிருக்கலாம். இதைவிட இவர்களை மீட்பதற்காக உத்தியோகபூர்வமாக கொடுக்கப்படும் பிணை, மற்றும் செலவீனங்கள் தவிர பன்மடங்கு தொகைப்பணம் வழக்கறிஞர்களுக்கும் சலுகை கருதி பொலிஸாருக்கும் அலைந்து திரிவதில் ஓட்டோ, டாக்சி போன்றவற்றிற்கும் தொலைபேசியிற்கும் என்று வேறு செலவாகிறது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இப்படியான ஒரு அவலநிலை எந்தக் குற்றத்திற்காக இத் தமிழ் மக்கள் மீது சுமத்தப்பட்டிருக்கிறது? உண்மையில் கொழும்பு வந்துள்ள பெரும்பாலான தமிழ் மக்கள் வடக்கு, கிழக்கில் இருக்கின்ற பாதுகாப்பற்ற கடினமான வாழ் நிலையிலிருந்து தப்பித்துப் புலம் பெயர்ந்தவர்களே.

இப்படி அரசாங்கம் நடத்துவதைப் பார்த்தால் தமிழ் மக்கள் அனைவரையும் பயங்கரவாதிகளாகவே அது பார்க்கிறது என்பதைத்தான் உணர முடிகிறது. ஒரு நாட்டின் பாதுகாப்புக்காக என்று போடப்பட்ட சட்டங்களும், நடவடிக்கைகளும் எவ்வாறு குறிப்பாக ஒரு இனத்திற்கெதிராக செயல்படுத்தப்படுகிறது என்பதை நாம் இங்கு பார்க்க முடியும். உதாரணத்திற்கு என்னைக் கைது செய்த சம்பவத்தை எடுத்தால், எனது அறைக்குள் பொலிஸார் பிரவேசிக்கும்போது அதற்குள் யார் இருக்கின்றார்கள் என்றே அவர்களுக்குத் தெரியாது. எனது பெயர் என்ன? தொழில் என்ன? வயதென்ன? உருவம், நிறம், ஆணா, பெண்ணா, எதுவுமே அவர்களுக்குத் தெரியாது. ஆக அவர்களுக்குத் தெரிந்த ஒன்று இதற்குள் யாரோ தமிழர் இருக்கிறார்கள் என்பது மட்டும்தான். உள்ளே வந்த பின்னர்தான் உனது பெயர் என்ன? தொழில் என்ன? ஊரென்ன? என்று கேட்கிறார்கள். ஆனால் இவர்கள் என்னைக் கைது செய்ததிற்கு கொடுக்கப்பட்ட சட்டரீதியான விளக்கம் "நியாயமான சந்தேகத்தின் பேரில்" என்பதே. ஆக அவர்களுக்கு என் மீது சந்தேகம் எழுந்ததற்கான வலுவான நியாயம் இவன் ஒரு தமிழன் என்பதே தான். ஏனெனில் அது மட்டும்தான் அவர்களிற்கு முன்னமே தெரிந்திருந்தது. கைது செய்யும்போது நான் அவர்கள் கேட்ட சகல கேள்விகளுக்கும் விளக்கமளித்தும், இவர்கள் தமது குற்றப் பத்திரத்தில் குறிப்பிட்டது போல் கொழும்பில் நிற்பதற்கு தகுந்த காரணம் அளிக்க முடியாத ஒருவனாக அல்லாமல் தகுந்த அத்தாட்சிகள் காண்பித்தும் கூட என்னை அழைத்துச் சென்றார்கள். இவ்வாறு பலருக்கு நிகழ்ந்துள்ளது. இவற்றிற்கெல்லாம் அவர்களின் பதில் பொலிஸ் ஸ்ரேசனிற்கு வந்து சொல் என்பதே ஒழிய அவ்விடத்தில் எதையும் செவிமடுப்பதாக இருக்கவில்லை.

இவ்வகை அனுபவத்திற்கு உட்படுகையில் கௌரவமான ஒரு பிரஜை காரணம் எதுவும் கூறப்படாமல் கைது செய்யப்பட்டு குற்றவாளிகளுடன் சேர்த்து அடிப்படை வசதிகள் கூட அற்ற ஒரு சிறைக்கூண்டில் அடைக்கப்பட்டு அவமானப்படுத்தப்படுகையில் அவற்றை இலங்கையின் பாதுகாப்புச் சட்டங்கள் நீ தமிழன் என்ற காரணத்தினால் இந்த அவமானம் உனக்கு உபாக்கியதை உடையதுதான் என்று சொல்வதாக அவன் உணர்கையில், இலங்கை ஜனநாயக சோஷலிச குடியரசின் சமத்துவமான குடிமக்களுள் ஒருவனாகவா தன்னை உணருவான்?

- து.பாஸ்கரன்
பிரதம ஆசிரியர் "அருவி"

---

*"அடிப்படை உரிமைப் பிரச்சினையும், அருவி ஆசிரியரின் கைதும்" என்ற தலைப்பில் அருவி ஆசிரியரால் எமக்கு அனுப்பி வைக்கப்பட்ட அறிக்கையிலிருந்து சில பகுதிகள் பிரசுரிக்கப்பட்டுள்ளன.*

*- ஆ.கு*

அடுத்த இதழில்...
அன்னம் சொன்ன கதை
பார்வை!
பிள்ளைபிடிகாரர்
இன்னும் பல....!



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## ...... வீரம்!

ஓ நண்பனே !
தாயின் தாலாட்டில்
கொடுமைகளைச்
சொல்லவில்லையே!

பள்ளிப் பருவத்திலும்
சேர்ந்து விளையாடுவது
புரிந்துணர்வை வளர்க்க
என்றல்லவோ
போதிக்கப்பட்டது!

விசுவாசம் கொண்ட
சத்தியப் பிரமாணத்துடன்
துப்பாக்கி சுமந்த
தோளுடன்
கட்டளைக்குப் பணிந்து
எந்தத் திசையானாலும்
யரோ ஒருவரை
குறி வைக்க
நீயும் உன் நல்பர்களுமாய்..

ஒரு தானையும்
பேனாவையும்
கையிலெடுத்து
நாங்களுமாய்..

எத்தனைகாலந்தான்..?

வாழ்வின் மகத்துவம்
கொடுமையில்தானா?

கூடி விளையாடி படித்த
நண்பர்கள் கூட
குறிக்கு அஞ்சி
எத்தனையோ திசைகளில்
எல்லைகள் தாண்டி
மீண்டும் ஓர் அடிமையாய்.

கருத்துகள் வேறுதான்.
பதிலாக வன்முறை
அது
வேண்டவே வேண்டாம்.

வீரம்!
அது எதிரியை
அடையாளம் கண்டு.
எதிரிக்கு எதிராய்
மட்டுமே.

*
ஜெகன்

---

## நூல் அறிமுகம்

**Konkret**

* அரசியல் மாத இதழ்
* ஜேர்மன்
* பிரதி 8.- டி.எம்
* Postfach 306139
  20357 Hamburg
  Germany

ooo

**A Decade of Conflict Sri Lanka 1983-1993**

* தகவல் தொகுப்பு
* ஆங்கிலம்
* பிரதி 9.-டி.எம்
* Südasien Büro
* Grosse Heim Str.58
* 44137 Dortmund
* Germany



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சரிநிகரும் சூரியதீபனும்

*"கொழும்பிலிருந்து வெளிவரும் ஒரு சிறு மாதப் பத்திரிகையில் பூரணா என்ற பெயரில் எழுதிக் கொண்டிருப்பவர் முன்பு களவுக் கட்சியில் இருந்த சிவப்பு வீரர். கொழுத்த சீதனம் வாங்கிக் கொள்கை வளர்த்த அந்தச் செம்மல் இயக்க வரலாறு எழுதுவது வேடிக்கை. பூரணாவுக்குச் சந்திக்கும்போது பூரண விளக்கம் கொடுக்கப்படும். நமக்கும் தெரியும் என்று காட்டப்படும். பிழைத்துப் போகட்டும் என்கிற நினைப்பை பகைத்துக் கொள்ளலாம் என்று பலவீனமாகக் கருதிக் கொண்டால் இனிப் புரியும். சரி தகரும்."*

மேலுள்ளது 'சூரியதீபன்' புல்லட் பொக்ஸில் எழுதியது (தினகரன் ஏப்.18).

'பச்சை' இனவாதக் கட்சியின் ஏரிக்கரைப் பத்திரிகையான 'டெய்லி நியூஸ்' இன் தமிழ்ப் பதிப்பான தினகரனில் 'புல்லட் பொக்ஸ்' என்கிற பத்தியில் சூரியதீபத்தைப் பெயரில் ஏந்திக் கொண்டு எழுதுபவர் முன்னர் 'களவுக்கட்சி'யில் (ஈ.பி.ஆர்.எல்.எவ்.) இல் இருந்தவர். 'களவுக்கட்சி'க்குள் நடந்த அதி'காரப்' போட்டியில் கட்சியால் கடத்திச் செல்லப்பட்டவர். வெளியில் இருந்த ஜனநாயக சக்திகள் 'விடுதலை செய்' என்று ஆர்பரித்த புண்ணியத்தில் வெளியில் வந்தவர். இவரை விடுதலை செய் என்று கோரிய ஜனநாயக சக்திகளையே இப்போது வேரோடு சாய்க்கப் புறப்பட்டிருக்கிறார்; கோடரிக் காம்பைப் போல.

ஐம்பதுக்கு மேற்பட்ட பத்திரிகைகள் தற்போது இங்கு வெளியாகிக் கொண்டிருக்கின்றன. முக்கியமான நான்கோ ஐந்து பத்திரிகைகள் அரசைக் கடுமையாக விமர்சிக்கின்றன. எழுதுகிற சுதந்திரம் இந்த ஆட்சியில் தான் பூரணமாக வழங்கப்பட்டுள்ளது என்று அரச தலைவர் அவ்வப்போது ஓலமிடுகிற ஒப்சேவரின் தமிழ்ப் பதிப்பில்தான் சூரியதீபன் வெளிப்படையாக மிரட்டியிருக்கிறார்?. அவ்வாறானால் இப்படியான மிரட்டலுக்கும், கரு(மு)த்து நெரிப்புக்கும் மத்தியிலிருந்துதான் இந்த ஐம்பதுக்கு மேற்பட்ட பத்திரிகைகளும் வெளிவருகின்றன என்பது தெளிவாகக் காட்டப்படுகிறது. லிப்ரன் சந்தியிலும், கோதமி றோட்டிலும் கத்திக் குத்துகளுக்கும், அடி, உதைகளுக்கும் மத்தியில் போராடிப் பெற்றதுதான் இந்த எழுதுகிற உரிமையே தவிர ஆளுகிறவர்கள் எழுதுகிறவர்களுக்குப் போட்ட பிச்சை அல்ல என்பதையும் இது காட்டுகிறது.

இனி இதனுடைய மற்றொரு பக்கம்; தன்னைத் தவிர மற்றெல்லோரையும் விமர்சிக்கிற - மிரட்டுகிற, விரட்டுகிற உரிமை தனக்கு மட்டுந்தான் உண்டு என்று சூரியதீபன் நினைப்பாராகில் அதற்கு முன்னரே புலிகள் அப்படி நினைத்து சூரியதீபனையும், சகபாடிகளையும் விரட்டியது சரியென்றாகிவிடும். பிறகெதற்கு மக்கள் குரலிலும், புல்லட் பொக்ஸிலும் சூரியதீபன் ஜனநாயகம் பற்றி ஒப்பாரி வைக்கிறார்?



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

யாழ்ப்பாணத்திற்குள் வேறு எந்தப் பத்திரிகைகளும், சஞ்சிகைகளும் வரக்கூடாது, மாற்று அபிப்பிராயம் என்ற பேச்சுக்கே இடமில்லை என்று புலிகள் நினைப்பதற்கும் சூரியதீபனின் மிரட்டலுக்கும் வித்தியாசமில்லை. சூரியதீபனாரும் யாழ்ப்பாணத்திலிருந்து கையில் கொஞ்சம் ஆயுதங்களும் வைத்திருந்தால் இன்னொரு புலிதான்!

இந்த லட்சணத்தில்தான் புலிகளுக்கு தாங்கள்தான் மாற்று என்று கொழும்பு வாழ் தமிழ் கட்சிகள் ஒலம் வைக்கின்றன. முன்னரும் இந்திய இராணுவக் காலத்தில் ஈ.பி.ஆர்.எல்.எவ்.வினர் புலிகளுக்கு மாற்று தாங்கள்தான் என்றார்கள். அமைதிப்படை புடைசூழ வந்து கொன்றார்கள், வென்றார்கள்(?), போனார்கள். இந்த அமைதிப்படை அமைதி காத்த காலத்தில் தமக்கெதிராக எழுதுகிறார் என்று கூறி புலிகள் சண் என்கிற சண்முகலிங்கத்தைக் (ஈழநாடு பத்திரிகையாளராக முன்னர் இருந்தவர். பின்னர் முரசொலி) கொண்டு போனார்கள். போனவரைக் காணவில்லை புலிகளுக்கு மாற்றாக இருந்த ஈ.பி.ஆர்.எல்.எவ்வோ சற்றும் சளைக்காமல் முரசொலியையே அள்ளிக் கொண்டு போயிற்று.

ஆக, புலிகள் தம்மைத் தவிர மாற்று அபிப்பிராயம் உள்ள மற்றையவர்களை அடித்தார்கள், உதைத்தார்கள், மீறியவர்களை மறு உலகிற்கே அனுப்பி வைத்தார்கள். அதற்கு மாற்று என்று சொல்லிக் கொண்ட ஈ.பி.யினரும் புலிகளுக்கு மாற்றாக தம்மையும், தமது விசுவாசிகளையும் தவிர்ந்த அனைவரையும், அனைத்து அபிப்பிராயங்களையும் இந்திய அமைதிக் கால ஜனனாயகப்படி மிரட்டினார்கள், விரட்டினார்கள், வெடி வைத்தார்கள். இப்போதோ பிரேமாவின் குண்டிக்குள் ஒளிந்திருந்த ஈ.பி.டி.பி. யும் அதையே செய்கிறது.

அப்பாவிப் பொதுமக்கள் கொல்லப்பட்ட கிளாலிப் படுகொலையை, கொல்லப்பட்டவர்கள் புலிகளே என்று மக்கள் குரல் பிழைப்பு நடத்த முயன்றபோதுதான் மக்கள் குரலின் முகத்திரையைக் கிழித்தது சரிநிகர். சாயம் வெளுக்கத் தொடங்கியதும் சட்டென்று தெருச் சண்டித்தனத்தில் குதித்திருக்கிறார் ஈ.பி.டி.பி.யின் அரசியல் ஆலோசகர் சூரியதீபன் என்கிற ரமேஷ்.

அன்னபூரணாவின் தேசிய விடுதலைப் போராட்டம் ஒரு மீளாய்வு தொடரில் ஈ.பி.டி.பி. பற்றியோ,






தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மக்கள் குரல் பற்றியோ, புல்லட் பொக்ஸ் பற்றியோ எதுவுமே வரவில்லையே என்பது என் அங்கலாய்ப்பு. தேசிய விடுதலைப் போராட்டம் தொடர்பான நாம் அறிந்திராத பல்வேறு தகவல்களை அக் கட்டுரை தருகிறது. எழுபதுகளின் போராட்டத்தின் ஆரம்பக் காலங்கள் பற்றி தொண்ணூறுகளில் இருக்கும் பலருக்கு தெரியாது. அவ்வகையில் பூரணாவின் கட்டுரை மிகப் பயனுடையது. இதில் நான் கொள்ளும் முரண்பாடு எதில் என்னெனில் பூரணா தனது பார்வையை வடக்குக்குள் குறுக்கிக் கொள்வதில்தான். கிழக்கு மாகாணத்தில் தேசிய இனப்பிரச்சினை தொடர்பான விடயங்களை அக் கட்டுரை தரவில்லை. சரி அது போக,

ஈ.பி.டி.பி.யின் பாய்ச்சல் இக் கட்டுரை மீது ஏன்? வரலாற்றில் வரப் போகிற குத்துக் கரணங்களையும், சூரியதீபன் போன்றவர்களின் ஜனனாயகத்தையும் எங்கே பூரணா எழுதிவிடுவாரோ என்ற பயமோ? தான் தொடர்ந்தும் பொய் எழுதிப் பிழைப்பு நடத்த முடியாது என்ற கவலையோ?

எழுதுகிறவருக்கு கொஞ்சம் மனச்சாட்சியாவது இருக்க வேண்டும். தான் யாருடைய நலன்களுக்காக பேனாவைத் தொடுகிறேன் என்கிற சுயவிசாரம் இருக்க வேண்டும்.

கூலிக்கு மாரடிக்கிறவர்களிடம் இதையெல்லாம் எதிர்பார்க்க முடியாதுதானே. இறுதியாக சூரியதீபனாருக்கு ஒரு வேண்டுகோள்: உங்களைப் போன்றவர்கள் மக்களுக்காக ஏதாவது செய்ய விரும்பினால்...

ஒன்றும் செய்யாமலிருப்பதே மிக நல்லது.

— அம்பலத்தாடி (ஈழம்)

---

## மலர்விழி

ஒரு பூனை.
எங்கள் வீட்டில்
எங்களுக்குச் சொந்தமான
மண் நிறமும்,
மெல்லிய
வெள்ளைக் கோடுகளும்
கொண்ட பூனை.

ஆச்சி
அதற்கு அன்பாயிட்ட பெயர்
செத்துப்போன
அப்புவின் நினைவாக
'வல்லிபுரத்தான்

களவில்லை.
பாலுக்குக் காவலிருக்கும்.
"நல்ல வளர்ப்பு" என்று
சனம் சொல்லும்.

'மலர்விழி'
எங்கள் வீட்டுக் கிளி.

வல்லிபுரத்துக்கு
எப்போதும்
அதிலொரு கண்.

கூட்டை விட்டு
வெளியில் வந்தொரு நாள்
மலர்விழி
மயிரிழையில்
உயிர் தப்பியது
வல்லிபுரத்தானிடமிருந்து.

ஆசையாய்
அப்புவின் பெயரை வைத்த
ஆச்சி சொன்னா
"வல்லிபுரத்தான
கூட்டுக்க விட்டு,
மலர்விழியைத்
திறந்துவிடு வெளிய"
என்று.

மலர்விழி இப்போ
திண்ணையிலிருந்தும்
நித்திரை கொள்ளும்
சுதந்திரமாக.

*
கௌசல்யன்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பி. வெந்து... உருக்குலை ந்து போவானோ? "வேண் டாம் பாவம்" அவனை அறி யாமலே வாயில் வார்த்தை கள் வந்தன. மனது விம் மித் தணிந்தது.

ஒருவேளை எதிர்பார் ப்புக்கு மாறாக சற்று வாயாடியாக இருந்து இப் படிக் கேட்டுவிட்டால்...

"நீங்க அடக்க ஒடுக்க மா இருந்திருந்தா அவர் ஏன் அப்பிடிக் கேக்கப் போறார்? அவர் என்ன எல்லாப் பெட்டையளையு மே அப்பிடிக் கேட்டுக் கொண்டு திரியிறார்? அவ ரைத் திருத்துறதுக்கு மூத ல் உங்களைத் திருத்து ங்கோ"

கீதாவின் மனம் ஒரு கணம் திடுக்குற்றது. யோசனைதான் பண்ணி னாள். ஆனாலும் பதில் முகத்தில் அறைந்தது. இது சகிக்க முடியாதது. பெண்ணே ஆணின் கருத் தைத் தாங்கி அவனையே காப்பாற்ற வரும் அவலம். இதைவிட அவன் கேட்டது ஒன்றும் மோசமாகத் தெரியவில்லை. எல்லாவற் றிற்கும் மேலாய் இதை இவ்வளவு பாரதூரமாக எடுப்பதே அர்த்தமற்றதா கப்பட்டது.

எங்கெங்கோ சிந்த னையில் சென்றவள் நடந்த சம்பவத்திற்கு வந்தாள். நினைக்க அவளுக்கு சிரிப் பாக இருந்தது. அவன்



அப்பிடிக் கேட்டபோது தனக்கு ஏன் ஆத்திரமோ. கோபமோ வரவில்லை என நினைக்கையில் ஆச்ச ரியமாக இருந்தது.

தெளிவாய் நிதானமாய் கூறினாள்:

"என்னை மாதிரி கொஞ்சம் வெளிப்படையா பழகிற பொம்பிளையளைப் பற்றித் தப்பா எடை போடுறீங்க. நீங்க என்ன இந்தச் சமூகமே அப்பிடித் தான் நினைக்குது. நீங்க இப்பிடிக் கேட்டதுக்காக வருத்தப்படுறன். கொஞ்ச நாள் பழக்கத்திலேயே உங்கடை நினைப்பு எனக் கு விளங்குது. உங்களுக் குத் தேவை **அதுதான்** எண்டா உங்களை நம்பி வீட்டிலை மனிசி இருக்கி றா. அவாவும் ஒரு பெண் தான்."

இந்தப் பதிலைவிட கன்னத்தில் அறைவது பல ன் தந்திருக்குமா? இல் லை. வன்மம் வளர்த்திருக் கும். அவன் பலாத்காரத் தைப் பிரயோகிக்காதவ ரை தான் வன்முறையைப் பிரயோகிப்பது சரியல்ல என்று தெரிந்தது. கேட்ப தை தனது உரிமையாக அவன் நினைத்திருக்கலாம்.
[தொடர் 33 ஆம் பக்கம்]



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சிறுகதை

# அற்றாக் !

எப்பொழுதாவது நண்பிகளைச் சந்திக்கும் வாய்ப்பு அரிதாகக் கிடைக்கும். அதைத் தவறாது சந்தித்து விடுவாள் கீதா.

அன்றும் நண்பிகளைச் சந்தித்துவிட்டு வந்ததில் மனது கனத்திருந்தது. கட்டிலில் புரண்டு புரண்டு படுத்தாள். நித்திரை வரமாட்டேன் என்று அடம் பிடித்தது. யோசிக்கக் கூடாது என நினைத்து எல்லாவற்றையும் மூட்டை கட்டி வைத்துவிட்டு ... என முயன்றாள். முடியவில்லை. கேள்விச் சன்னங்கள் சிந்தனை உடலைச் சல்லடை போட்டன. சிந்திக்கத் தொடங்கி விட்டாலே சில சமயங்களில் சித்திரவதை என்றாகிறது. நித்திரைக்கான பிரயத்தனம் தோற்றுப் போனது.

இதற்கொரு முடிவு காணலாம் என்று நினைத்து லைற்றைப் போட்டாள். நேரம் ஒரு மணி. விடிய ஏழு மணிக்கு வேலை. போராட்டத்தில் நெஞ்சு தகித்தது. அறை புழுங்கியது.

எழுந்து சன்னலைத் சிறிது திறந்து விட்டாள். இவ்வளவு நேரமும் என்னையா தடுத்தாய் என்பது போல் வெப்பத்தை வெளியே தள்ளிக் குளிர் ஊடுருவியது.

மறுபடியும் வந்து படுத்தபடியே சிந்தனையில் ஆழ்ந்தாள் கீதா.

இப்படித்தான் நேற்றிலிருந்து ஒரு மாதிரி. நண்பிகள் குழாம் கேட்ட கேள்விகளும், போட்ட போடல்களும் மூளையைக் குடைந்தன.

"ஒருவேளை நான் செய்தது தவறோ? நண்பிகள் சொன்னது போலத்தான் நான் நடந்திருக்க வேணுமோ? அவர்களுக்கும் அநுபவம் ஏற்பட்டிருந்தால் எப்படி நடந்திருப்பார்கள்?"

"பனார் எண்டு வெளுத்திருக்க வேணும் கன்னத்தில. நானெண்டா..." சறோ ஆக்கிறோசமாகச் சொன்னாள்.

*"சீச்சி.. அடிக்கிறதா?* அப்பிடி என்ன நடந்திட்டுது? நான் அவனுக்கு சொன்ன சொல்லுகளே வன்முறைதானே?" என்று யோசிக்கையில் தொடர்ந்து ஒன்றன்பின் ஒன்றாய் கேள்விகள். குழம்பித்தான் போனாள் கீதா.

"வன்முறை செயலில் தான் வரும் என்றில்லை. வார்த்தைகளிலும் வரும்." எங்கோ படித்தது ஞாபகத்திற்கு வந்தது.

"அவர்கள் என்னைப் புரிந்து கொள்ளவில்லையா? அல்லது நான்தான் கோழைத்தனமாக நடந்து கொண்டேனா?" கேள்விகள் அவளின் செயலை மறுவிசாரணை செய்தாலும், தான் செய்தது என்னவோ சரியென்றே அவள் மனம் சொன்னது. தான் அடித்திருந்தால் அது ஏற்படுத்திய காயத்தைவிட சொன்ன சொற்கள் ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தி இருக்குமென கீதா நம்பினாள்.

றொம்பத்தான் மாறிப் போனாள் கீதா. இப்படி யோசிக்கக் கற்றுக் கொண்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

டதை நினைக்கையில் அவ ளுக்கே ஆச்சரியமாக இரு ந்தது.

பள்ளிக்கூடக் காலங்க ளில் தனது வீட்டுக்கு மிக அண்மையில் வாடகைக்கு குடியிருக்கும் இளைஞன் காதல் கடிதம் தந்ததற்கே கோபப்பட்டு அண்ணாவி டம் சொல்லி, அழுது வெம்பி, அவனுக்கு அடி யும் வாங்கிக் கொடுத்த நானா இன்று இப்படி மாறியது என நினைக்கை யில் அவளுக்கு ஆச்சரிய மாகத்தான் இருந்தது.

வெளிநாடு வந்து, அண் ணாவின் துணை இல்லா மல் வேலை தேடி, தனித் து வாழ்கையில் உலகம் புரிந்தது. கால்கள் பலம் பெற்று எழுந்து நிற்க முடி ந்தது. வாழ்க்கை அநுப வம் பாதி, புத்தகங்கள் தந்த அநுபவம் மீதியாக வளர முடிந்தது.

புத்தகங்களிலிருந்து அநுபவமா? புத்தகங்களை புத்தகங்களாகப் பார்க்கா மல் அநுபவங்களாக்கி செரித்துக் கொள்ள எல் லோராலும் முடிவதில்லை யோ? கீதா அநுபவங்களை செரித்திருந்தாள். அநுப வம் தந்த மாறுதல் அவ ளைத் தலைகீழாக மாற்றி இருந்தது.

மீண்டும் மீண்டும் சிந் திக்கையில் அவளின் நண் பிகள் மீது அவளுக்கு ஒரு வித கழிவிரக்கம் பிறந் தது. ஆனால் அவர்கள் எழுப்பிய கேள்விகள் இவ ளையே உலுப்பி விட்டன.

"நீ இப்படி வந்தது கோழைத்தனம்"

"முறையாய் குடுத்திருந் தால் வேறை பெட்டைய ளைப் பாத்து இனி இப்பி டிக் கேட்க மாட்டான்"

"இது உனக்கு மட்டும் உரிய தனிப்பட்ட பிரச்சி னையில்லை. எல்லாப் பெண்களும் சம்பந்தப்பட்ட பிரச்சினை"

"இதை சும்மா விடக் கூடாது"

"அப்பிடி என்ன கேட்டு ட்டான். பச்சையாய் சொன் னா தன்னோடை படுக்க வாறியோ எண்டு கேட்டா ன். அவ்வளவுதானே?" சற் று உணர்ச்சிவசப்பட்டு கத் தியே விட்டாள் கீதா. நண் பிகள் மௌனமானார்கள். மௌனத்தைக் கலைத்தாள் கௌரி.

"பெண்களை படுக்கை அறைப் பொருளாய் பாக்கி றதை ஏற்றுக் கொள்ளி றியா?"

இல்லையெனத் தலை யை மட்டும் ஆட்டினாள் கீதா.

"இந்தப் பிரச்சினை யை சர்வசாதாரணமாக அலட்சியப்படுத்துறது தவ று" சறோ சொல்ல எல் லோரும் ஆமோதித்தனர்.

குறைந்தபட்சம் அவனி ன் மனைவியிடமாவது சென்று முறையிடக் கோரி னர். கீதா தடலடியாக மறு த்தாள். ஆனாலும் காரண த்தைத் தெளிவாகச் சொல் ல அவளால் முடியாமல் போனது.

"அவளும் நம்மைப் போல ஒரு பெண்தானே" என்று மட்டும் கூறினாள். இதுபற்றி யோசிப்பதாகக் கூறி விடைபெற்றாள்.

யோசிப்பதாகச் சொன் னாலும் சொன்னாள். அதி லிருந்து மனது ஒருநிலை யில் இல்லை. தூக்கம் மற ந்து வெகு நேரமாயிற்று. நண்பிகள் தன்னைப் புரிந் து கொள்ளவில்லையா? அல்லது தன்னுடைய மன தை அவர்களுக்கு வெளிப் படுத்த தெரியவில்லையா? எனக் குழம்பினாள். சரி அவர்கள் கூறியதுபோல அவனின் மனைவியிடம் சென்று முறையிட்டால் எப்படி இருக்கும்..

முகம் தெரியாத அந் தப் பெண் பலவித உருவி ல் தோன்றினாள். கணவ னின் ஒழுக்கத்தைப் பற்றி ய நம்பிக்கைகளில் வாழும் அப்பாவிப் பெண்ணாக இருந்தால்...

முறையிடு கோட்டைக ளைத் தகர்க்கும். அந்த இடிபாடுகளை கணவனிட ம் காட்ட வழியற்று, வெம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# கோவணாண்டிகள்

"பட்டு வேட்டி கிடைக்கும் வரை கோவணத்தையாவது காப்பாற்றுவோம்" என்கிறது புளொட்டின் (PLOTE) மாத ஏடான `தமிழ் முரசு'(2-ஒலி:3). பாவம் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தினர். அரசுடன் நிற்பதனால் கோவணம் மட்டும் எஞ்சியுள்ளதுபோல் தெரிகிறது. ஆனால் தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் அவர்கள் எப்போதோ நிர்வாணம் ஆக்கப்பட்டுவிட்டனர் என்பது புளொட்டுக்குத் தெரியாதா அல்லது தெரியாததுபோல் பாசாங்கு செய்கிறார்களா?

சரி கோவணத்துடன் நிற்கும் இவர்கள் கோவணமே இல்லாத சிறுபான்மை மக்களிடம் அண்மையில் கேட்டதென்ன? நடந்து முடிந்த மாகாணசபைத் தேர்தலில் யூ.என்.பி.யையும், பிரேமதாசாவையும் பாதுகாக்கும் தேவையை உணர்ந்து செயற்படுங்கள் என்பதுதான்.

இதே புளொட்டினர்தான் 1981ஆம் ஆண்டு நடைபெற்ற மாவட்டசபைத் தேர்தலைக் குழப்பியும், தேர்தல் கடமைகளில் ஈடுபட்ட பொலிஸாரைச் சுட்டும் தேர்தலை நிராகரித்தனர். குறுகிய 12 வருடகால இடைவெளியில் மீண்டும் கூட்டணியின் பாராளுமன்ற அரசியலில் வந்து நிற்பதோடு மட்டுமல்லாமல், இலங்கை அரசின் படையாகவே நிற்கின்றனர்.

இவ்வாறு தாம் எடுத்துள்ள அரசு ஆதரவு நிலைப்பாட்டுக்குப் புலிகளே காரணம் எனக் கூறும் இவர்களது நியாயம் அரை உண்மை ஆயினும், தமது அரசியல் போக்கும், கோட்பாடுகளும் கூட முக்கியமான காரணம் என்பதை மறைத்துவிடுகிறார்கள்

ஆரம்பத்தில் தமிழீழ மக்களின் விடியலிற்காக புறப்பட்ட இவர்கள் உட்கொலைகளில் புதிய அத்தியாயத்தையே படைத்தனர். இன்று புலிகளின் ஜனநாயக மறுப்பு, பாஸிஸம், அராஜகவாதம் என்றெல்லாம் கூப்பாடு போடும் இவர்கள் உட்கட்சி ஜனநாயகம் இன்றி வெளியேறிய தீப்பொறிக் குழுவினரை மிருகத்தனமாக தாக்கி சித்திரவதைப் படுத்தினர். சந்ததியார் உட்பட அரசியல் சக்திகளை அழித்தொழித்தனர். ஏனைய இயக்கங்களுக்கு எதிரான அடாவடித்தனங்களில் ஈடுபட்டனர். `சர்வதேசப் புரட்சியின்' ஒரு பகுதியாக மாலைதீவில் `புரட்சி' செய்து தோல்வியைத் தழுவி, பின்பு தென்னிலங்கைப் `புரட்சியாளர்களுடன்' இணைந்து கொண்டனர். மன்னார் மகாநாட்டில் ஜே.வி.பி.யுடன் இணைவதாக முடிவெடுத்த காலப்பகுதியில் முகுந்தன் உள்ளுக்குள்ளிருந்தே கொல்லப்பட்டார். பின்னர் இன்று அரசுடன் இணைந்து ஐக்கிய முன்னணி அமைத்து புலி வேட்டையில் ஈடுபடுகிறார்கள்.

இன்றைய இலங்கையின் அரசியல் போக்குக்கு ஏற்பவே ரெலோ, ஈ.பி.டி.பி.யின் வரிசையில் புளொட்டினரும் ஒரு கையில் ஆயுதமும், மறுகையில் `ஜனநாயகமுமாக' அங்கலாய்த்து அலைகின்றனர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இதனால் ஆயுதம் தாங்கிய ஒரு பகுதியினரின் நடவடிக்கைகள் தொடர்ந்து செல்லும் அதேவேளை ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி(DPLF) என்ற அரசியல் கட்சியையும் ஆரம்பித்தனர். இதன் தலைவராக சித்தார்த்தனும், செயலாளராக டி.பி. சிவராமும் (எஸ்.ஆர்) செயற்பட்டனர். ஆனால் எஸ்.ஆர் இப்போது தலையை உள்ளே இழுத்து ஆமை போல் அடங்கி இருக்கிறார் பெயரை `மாசு`படுத்தாமல்! ஆனாலும் இவரே மறைமுக ஆலோசகராகவும் விளங்குகிறார். இக் கட்சி 1988 தேர்தலிலும் போட்டியிட்டு தோல்வி அடைந்தது குறிப்பிடத்தக்கது.

புளொட்டினர் முன்னொரு காலத்தில் மக்கள், மாணவர், மகளிர், தொழிற்சங்க அமைப்புகளை தமிழீழம் எங்கனும் பரப்பி, மக்கள் ஜனநாயகப் புரட்சி பற்றியும், அதில் நீண்டகால தந்திரோபாயம் பற்றியும் பேசினார்கள். இன்றோ பாராளுமன்ற அரசியல் என்றும், ஆயுதப் போராட்டம் என்றும் முரண்பட்ட வாதங்களை பேசித் திரிகிறார்கள். இது இவர்களிடம் என்றுமே நிலையான கொள்கைகளோ, நடைமுறைகளோ கிடையாது என்பதையே புலப்படுத்துகின்றது.

தன்னுடைய இலக்கினை அடைய முற்படும்போது பிசாசுடனும் கூட்டுச் சேர தயார் என ஜே.ஆர் கூறியதுபோல், புலிகளை அழிப்பதற்காக மட்டுமே அரசுடன் சேர்ந்துள்ளதாகப் புளொட்டினர் விளக்கம் தருகின்றனர். ஆனால் இவர்களின் அனைத்துச் செயற்பாடுகளும் அரசின் கட்டுப்பாட்டுக்கு உட்பட்டே நடைபெறுகின்றன. பாலஸ்தீனத்தில் பயிற்சி பெற்று, இந்தியாவில் பயிற்சி பெற்று, பின்பு இலங்கை இராணுவத்துடனும் இணைந்து பயிற்சி எடுத்தனர். தேவை ஏற்படின் இஸ்ரேலிடம் சென்றாலும் ஆச்சரியப்பட ஏதுமில்லை.

இவ்வகையில் இன்று வவுனியாவில் தளம் அமைத்து தாண்டிக்குளம் ஊடாக வடக்கே முன்னேறி புலி அழிப்பில் ஈடுபடும் இவர்கள் தனியாகவும், இராணுவத்துடனும் இணைந்தும் தாக்குதல்களைத் தொடுக்கின்றனர். இவ்வாறான தாக்குதல்களின் போது இரண்டு பிரிவினருக்கும் இடையில் பயணிகள் அகப்பட்டுக் கொல்லப்படுவது சாதாரணமாகிவிட்டது.

விடுதலைப் போராட்ட காலத்தில் அரசிற்குத் தகவல் கொடுக்கிறார்கள், காட்டிக் கொடுக்கிறார்கள், தேசத் துரோகிகள் என்றெல்லாம் மனநோயாளிகளைக் கூட கட்டி வைத்து உதைத்தும், சுட்டும் கொன்றதில் புளொட்டின் பங்கு மகத்தானது.

ஆனால் இன்று, இராணுவத்துடன் இணைந்து வடபகுதியில் இருந்து வரும் இளைஞர்களைக் கைது செய்வதோடு சித்திரவதைக்கும் உள்ளாக்குகின்றனர். இத்தகைய காட்டிக் கொடுப்புகளுக்கு புலி எதிர்ப்பு மூலாம் பூசுகின்றனர்.

இதுமட்டுமன்றி வவுனியாவில் விளையாட்டுப் போட்டிகள் பல நடாத்தி இராணுவத்தினருக்குப் பரிசில்களும் வழங்குகின்றனர். அண்மையில் வவுனியாவில் புளொட்டின் இராணுவச் செயலாளர் வசந்தன் ஒரு இராணுவத்தினனுக்கு பரிசில் வழங்கிய படம் வீரகேசரியிலும் பிரசுரமானது. அவ்வாறே வவுனியாவில் நடைபெறும் அரச விழாக்களின் கௌரவ விருந்தினர் களாகவும் கௌரவிக்கப்படுகின்றனர்.

இவ்வாறான அடாத்துகளுக்கு எல்லாம் உடந்தையாக இருக்கும் புளொட்டினருக்கு அரசு தமிழருடைய உரிமைகளில் ஒரு துளியைத் தானும் விட்டுக் கொடுக்கப் போவது இல்லை எனத் தெரிந்திருந்தும்கூட அற்ப சலுகைகளுக்காக மட்டுமே அரசின் விருந்தினராகவும், விசுவாசிகளாகவும், சேவகர்களாகவும் தொழிற்படுகின்றனர்.

அதனால் கூட்டணிப்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பாரம்பரியத்தில் வந்த சித்தார்த்தன் போன்றோர் தம்மைப் பாராளுமன்ற அரசியலில் குறுக்கிக் கொண்டால் போதும் என்ற நினைப்புடன் காலத்தைத் தள்ளுகின்றனர். பிறிதொரு குழுவினர் அரசுடன் இணைந்து தமது நலன்களைப் பாதுகாத்துக் கொள்வோம் என்கின்றனர். மற்றைய சிலரோ வருவது வரட்டும், காட்டுக்கே மீண்டும் செல்வோம் என்கின்றனர். இன்னும் சிலர் அரசு சார்பற்ற நிதிநிறுவனங்களை ஆரம்பித்து அதனூடாக சமூக சேவை உட்பட அபிவிருத்தி நடவடிக்கைகளைச் செய்வதன் ஊடாகத் தமது பெயர்களை நிலைக்கச் செய்யலாம் என்கின்றனர்.

எது எவ்வாறு இருப்பினும் இந்த அரசு சார்புத் தமிழ் குழுக்களின் பம்மாத்து அரசியல்கள் ஒருபோதும் நிலைபெறப் போவது இல்லை என்பதனை கடந்தகாலம் எமக்கு நன்றாகவே உணர்த்தியுள்ளது.

— கணேசு

[redacted]

[ 16 ஆம் பக்க தொடர் ]
அஞ்சினார்கள்.

விளைவு, தடுப்பு யுத்த மட்டத்திற்கு அப்பால் போகமுடியாமல் எமது போராட்டம் அடுத்த தசாப்தத்தில் காலடி எடுத்து வைக்கப் போகின்றது!

இது ஒருவகையில் மக்களது மனோநிலையை மோசமாகப் பாதிப்பதுடன் மேலும் மேலும் சிதைவை வளர்த்து வருகிறது.

ஆபத்தான இந்த நிலமைகளை கணக்கெடுத்துக் கொள்வது புதியதொரு வரலாற்றை உருவாக்க விரும்புபவர்களிற்கு மிக மிக முக்கியமான ஒரு அம்சமாகும்.

– குட்டியன் (ஈழம்)

## ஜேர்மனி

### வாசகர்களுக்கு.... !

01 யூலை 1993 இலிருந்து நகரங்களுக்கான கோட்டு இலக்கங்கள் மாற்றப்பட்டுள்ளன. 5 தானங்களைக் கொண்ட – நீங்கள் வசிக்கும் வீதிக்கான – புதிய கோட்டு இலக்கங்களை உடனடியாக எமக்கு அறியத் தாருங்கள்.

— ஆ.கு

[ 30 ஆம் பக்க தொடர் ]
அதை மறுப்பதும் மறுக்காததும் தனக்குள்ள உரிமை என்பது கீதாவுக்குப் புரிந்தது.

இப்படிப் படுக்கக் கேட்பதெல்லாம் வெளிநாட்டு நாகரிகத்தில் பற்றிக் கொண்டவை. அவர்கள் சுற்றி வளைத்து வருவார்கள். இவன் நேரடியாக கேட்டுவிட்டான். ஒருவேளை இவனுக்கு அந்த நாகரிகம் தெரியவில்லையோ!

கூட்டை விட்டு வெளியில் வந்து சிறகடித்து பறக்கையில் எத்தனை இடர்கள், அநுபவங்கள். அத்தனையையும் உள்வாங்கி மனிசியாக உயர் நிற்றல் எவ்வளவு கடினமான போராட்டம்.

இந்தப் போராட்டம் கீதாவைப் பக்குவப்படுத்தியிருந்தது. இந்தப் பக்குவம் தனது செயல் சரியென அவளை உறுதிப்படுத்தியது. இதை நண்பிகளுக்கு எப்படிப் புரிய வைப்பது என்பது அவளுக்குப் பிரச்சினையாக இருந்தது.

இப்போது குளிர் அறையை நன்றாகப் பதப்படுத்தியிருந்தது. கீதா எழுந்து யன்னலைச் சாத்தினாள். வெளியே பனி கொட்டிக் கிடப்பது லைற் வெளிச்சத்தில் வெள்ளையாகத் துலக்கமாகத் தெரிந்தது.

— கலா



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# இப்படிக்கு....

## வக்கிரமான பார்வை

தூண்டில் யூன் 93 இதழில் அனந்து என்பவரது விமர்சனமும், என் மீதான வக்கிரமான தாக்குதலும் கலந்த கட்டுரை பார்த்தேன். எனது கவிதை பற்றிய பிறரது சுதந்திரமான கருத்துகளில் நான் ஒரு போதும் கை வைப்பதில்லை. அது காலத்தின் பணி.

கவிதைக்கு வெளியே யானை பார்த்த குருடனின் மேற்கோள்களுடனும், ஒரு அப்பாவிக்கு துரோகிப் பட்டமும், மரணதண்டனையும் வழங்கும் இயக்ககாரன் ஒருவனது வக்கிரத்தோடும், `அகதிவாழ்வை விரும்பி ஏற்றவர்`, `சிக்கலில்லாத சமயத்தில் தமிழ்நாட்டில் உல்லாசம் அநுபவித்தவர்`, `மேற்குநாட்டு வசதியில் அழகில் வாயைப் பிளந்தபடி நிற்கிறார்`, `அநுதாபத்தைத் தேட அகதியின் பாடல் எனத் தலைப்பு வைத்து உல்லாசமாகப் பொழுதைப் போக்குகின்ற பாசாங்குக்காரன்` என்பது போன்ற குற்றச்சாட்டுகளை என்மீது அடுக்கியிருக்கிறார்.

தூண்டில்காரர்களும் இத்தகைய ஒரு கட்டுரையை உற்சாகப்படுத்தி எழுதுவித்து வெளியிட்டிருக்கிறார்கள். தூண்டில் ஒரு மஞ்சள் பத்திரிகையல்ல. பயனுள்ள ஒரு முயற்சி. தூண்டிலையும் மஞ்சள் பத்திரிகையாகக் கருதியிருந்தால் நான் சமருக்கு வந்திருக்க மாட்டேன்.

எனது வாழ்வு திறந்த புத்தகம். விரிவாக எழுத வேண்டியதில்லை. வகைமாதிரிக்கு சூழலில் யாதொரு சிக்கலும் இல்லாதிருந்த நேரத்தில் நான் தமிழ்நாட்டில் சந்தோசமாக சீவித்து கோத்தகிரி பல்லில் நீலகிரிக்குப் பயணப்பட்டதாக அனந்து குறிப்பிடுகிற நீலகிரிப் பயணக் குறிப்புகள் எழுதிய காலகட்டம் பற்றி மட்டும் சற்றுப் பார்ப்போம்.

நீலகிரிக்கு முதலில் சென்றது 86 கடைசிப் பகுதியில். இயக்கமொன்றின் கொலைக் கும்பலின் கைக்குத் தப்பி தலைமறைவாக இரவு நேரங்களில் பயணம் செய்து குன்னூர் வந்து சேர்ந்தேன். வசதிகள் ஏதுமற்ற ரெயில்வே ஊழியர் விடுதி ஒன்றில் வாழ்க்கை. குளிர்காலம், போதிய வெப்ப ஆடைகளோ, தரமான உணவோ இல்லாத கஷ்டமான வாழ்வு.

இரண்டாவது தடவை நீலகிரிக்கு வந்தது கோவையில் இருந்தபோது. அதுவும் வனவாசம்தான். தோழர் யமுனா ராஜேந்திரன் போன்ற இடதுசாரி நண்பர்களது ஆதரவில் வாழ்ந்த நாட்கள் அது. எனக்குத் தொல்லை தந்து வந்த இயக்கம் மற்றொரு இயக்க ஆலோசகரான அன்ரன் பாலசிங்கத்தின் விடுதிக்கு குண்டு வைத்தது நானும் எனது தங்கையும் எனப் பொய்த் தகவல் கொடுத்து தமிழ்நாட்டுப் பொலிஸாரைத் தூண்டிவிட்டதில் கைதாகி சென்னைக்கு எடுத்துச் செல்லப்பட்டேன். சகோதரியின் கைது அவரது துணிச்சலாலும், எனது போராட்டத்தாலும் தடுக்கப்பட்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

டது. விடுதலையாகி வந்ததும் நானும் சகோதரியும் நீலகிரிக்குச் சென்றோம்.

மூன்றாவது தடவை சிறிமாவோ-சாஸ்திரி ஒப்பந்த அடிப்படையில் தமிழகம் திரும்பிய மலையக தமிழ் மக்களது நிறுவனம் ஒன்றின் கருத்தரங்கிலும், கவியரங்கிலும் கலந்துகொள்ளச் சென்றது.

இந்த வாழ்வை உல்லாச வாழ்வு என்கிறதிற்கு அனந்து எவ்வளவு தூரம் வக்கிரம் அடைந்திருக்க வேண்டும். எழுதுகிறவனுக்கு மனது என்று ஒன்று வேண்டியதில்லையா?

87,88இல் நெருக்கடிகள், கைதுகள், மரணதண்டனை தீர்வு இவற்றின் பின் 88 யூனில் நோர்வே வந்தேன். நண்பர்கள் எச்சரிக்கைகளை உதாசீனம் செய்து மீண்டும் 90 ஆரம்பத்தில் தாயகம் திரும்பினேன். 90 மே 29இல் மட்டக்களப்பில் வைத்து இயக்கமொன்றைச் சேர்ந்த டேவிட் என்பவர் என்னைக் கைது செய்தார். மீண்டும் மரணதண்டனையை எதிர்பார்திருக்கிற கைதி வாழ்வு. பின்னர் யூன் 8ஆம் திகதி யாழ்ப்பாணததில் வைத்து விடுவிக்கப்பட்டேன். தலைமறைவாகக் கொழும்பு வருகை. கொழும்பில் ஆகஸ்ட் 26ஆம் திகதி நாட்டுக்கு விரோதமாக வேலை செய்வதாக குற்றம் சாட்டி பொலிஸ் எஸ்.பி.லால் ரட்ணாயக்காவால் கைது செய்யப்பட்டேன். இதைவிட கடத்தல் முயற்சியும் இடம்பெற்றது. மீண்டும் நோர்வே வந்தபோதும் அகதி அந்தஸ்து கோராமல் சிரமங்களுக்கு மத்தியிலும் நாடு திரும்புவதற்காக இலங்கைக் கடவுச்சீட்டைக் கைவிடாமல் வைத்திருக்கிறேன். இதுதான் அனந்துவின் வக்கிரமான மொழியில் அகதிவாழ்வை விரும்பி ஏற்ற இலட்சணம்.

அனந்துவும், தூண்டில் ஆசிரியர் குழுவும் எனது கவிதைத் தொகுப்பை மீண்டும் ஒருதடவை வாசிப்பது நல்லது.

- வ.ஐ.ச.ஜெயபாலன்

## பங்களிப்பு

புலம் பெயர்ந்த புத்திஜீவிகளின் ஆற்றல், திசை மாறிப் போகும் தமிழ் பேசும் மக்களின் உரிமைப் போராட்டத்தில் நியாயபூர்வமாகப் பங்களிப்புச் செய்ய வேண்டிய தேவை இன்று தவிர்க்க முடியாததாகி விட்டது. இதற்குச் சிறந்த களமாக தூண்டில் காணப்படுகிறது.

ஒடுக்குமுறைக்கு எதிரான விடுதலை உணர்வுகளை ஒழுங்கமைப்பதிலும் தூண்டில் பங்களிப்பை ஆற்றமுடியும் என நம்புகிறோம்.

எமது அமைப்பு முற்போக்குக் கருத்துத் தேடல்களில் ஆர்வமுள்ள இளைஞர்களைக் கொண்ட சமூகசேவை அமைப்பாகும். இவ்வாறான சஞ்சிகைகள், நூல்கள் எமது இளைஞர்களின் சிந்தனா விருத்திக்கும், செயற்பாட்டிற்கும் பெரும் தீனியாக அமையும் என நம்புகிறோம்.

- ஐ.சி.சி (ஈழம்)

## முதிசமா?

அனந்துவின் விமர்சனம் ஒருபக்கமானது. செழியனின் கவிதை வரிகள் செழியனுக்கு உரியனவல்ல, அவை சேரனின் வரிகள் என்கிறார் அவர். இது நகைப்புக்குரிய விடயமல்லாமல் வேறென்ன? தமிழை சேரனுக்கு முதிசமாக யார் எழுதிக் கொடுத்தார்கள்? அப்படியானால் சேரனின் வரிகள் தங்களுடைய வரிகள் என்று உரிமை கோர ஆயிரம் கவிஞர்கள் இருக்கிறார்கள்.

- பரம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## காசெங்கே போகிறது?

அவசரகாலநிதி, தேசநிதி, வழக்கமான நிதி, ரி.ஆர்.ஓ நிதி, உலகத் தமிழர் இயக்க நிதி என்று பலவழிகளில் புலிகள் மாதாந்தம் இங்கே காசு சேர்த்து வருகிறார்கள். இவை ஒழுங்காக நாட்டுக்குப் போய்ச் சேருகின்றனவா என்பதற்கு எந்த விதமான பற்றுச்சீட்டும் எங்களுக்குத் தருவதில்லை. கேட்டாலும் கறார் மறுமொழி சொல்கிறார்கள். அண்மையில் இலங்கையில் இவர்களுடைய இயக்கத்திலிருந்த எனது நண்பர் ஒருவர் எங்கள் இடத்திற்கு வந்துள்ளார். அவர் சொன்னதாவது வெளிநாடுகளில் சேர்க்கின்ற பணம் முழுமையாக தங்களுக்கு அனுப்பப்படுவதில்லையாம். அதோடு இங்கே காசு சேர்ப்பவர்கள் பலர் சிங்கப்பூருக்கு போய் வந்து நகை வியாபாரம் செய்வதாகவும் கேள்விப்பட்டேன். ஆகவே எமது தாயகத்தில் அல்லல்படும் மக்களுக்கு நேரடியாகப் போய்ச் சேரக்கூடிய முறையில் பணம் அனுப்ப வேறு வழிவகைகள் உண்டா என அறியத் தருவீர்களா?

– மா.ஜெயக்கொடி

இந்த இதழிலுள்ள துணுக்குகள் இன்னன்னாவினுடையவை.

அகதிகளுக்கு உதவி செய்கின்ற முகவரிகள்

***
***

Ceylon Students
Educational Fund
P.o.Box: 317
Brunswick
Victoria 3o56
Australia

***
***

மன்

V.Sivarajah
Angartalarstr. 98
47249 Duisburg
Germany

***
***
Association Garges
Tamoule Welfar
K.Muthukumar
11,Place Roger Salengro
95140 Garges Les Gonesse
France



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## இனிக் கொஞ்சம் நாங்கள்...

ஸோலிங்கனில் 5 துருக்கியர்களை வீட்டுக்குள் வைத்து தீயிட்டுக் கொன்றதுடன் பற்றி எரிந்த பரபரப்பெல்லாம் வழமை போலவே அமந்துவிட்டது. நாள் தவறாது ஜேர்மனியில் தொடர்ந்து கொண்டிருக்கும் வெளிநாட்டவர் மற்றும் அகதிகள் மீதான தாக்குதல்கள் கவனிப்பாரற்ற செய்திகள் ஆகிவிட்டன.

ஸோலிங்கன் தீ வைப்பைத் தொடர்ந்து ஜேர்மனிய அரசாங்கம் மேலான எதிர்ப்பு வலுத்தபோது, உடனடி எதிர் நடவடிக்கை எதிலும் இறங்காமல் ஹெல்மூட் கோலின் அரசு அரசாங்கங்களுக்கேயுரிய சிறப்பான நரித் தந்திரங்களுடன் நடந்து கொண்டது. அப்பாவி மக்களை நாஸிகள் கோரமாகக் கொன்றதினாலும், இதற்கெதிராக அரசு கண்மூடி இருந்ததினாலும் எதிர்வினையாக தங்கள் கோபங்களை வன்முறையாக துருக்கியர்களில் சிலர் செயலாக்கியபோதும் அரசாங்கம் பேசாமலேயிருந்தது! மூன்றாவது பரம்பரையாக இங்கே வாழ்கிறோம். ஆனால் எங்களுக்கான உரிமைகள் எங்கே என்று வெளி நாட்டவர்கள் தங்கள் எதிர்ப்பு நடவடிக்கைகளின்போது கேட்கையில், இரட்டை குடியுரிமை தரலாம் எனப் பட்டும்படாமல் அறிவித்தது!!

எதிர்ப்பு நடவடிக்கைகள் எல்லாம் ஓய்ந்த பின்னர்தான் அரசாங்கம் தன்னுடைய வேலையைக் காட்டியது.

இரட்டைக் குடியுரிமை தர முடியாது என ஹெல்மூட் கோல் உறுதியாகவே தெரிவித்துவிட்டார். அத்துடன் வெளி நாட்டவர்களுக்கு எதிரான மேலும் புதிய சட்டங்கள் சூட்டோடு சூட்டாக



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பிறப்பிக்கப்பட்டன.

- தங்கள்
சுயபாதுகாப்புக்காயினும் கூட
ஆயுதங்கள் வைத்திருப்பின்
வெளிநாட்டவர் கைது
செய்யப்பட்டு நாடு
கடத்தப்படுவார்கள்.

- ஜேர்மனியின்
அமைதிக்கு ஊறு
விளைவிக்கும் வெளி
நாட்டவர்கள் கைது
செய்யப்பட்டு நாடு
கடத்தப்படுவார்கள்.

"இவற்றிற்கமைய" சில துருக்கியர்களும், குர்திஸ்தானியர்களும் கைது செய்யப்பட்டார்கள். அதேநேரம், ஸோலிங்களில் 5 பேரைக் கொலை செய்தது நாஸிகள் இல்லை என்றும், இக் கொலைக்கு எந்தவிதமான அரசியற் காரணங்களும் இல்லை என்றும், பதினாறு வயதிற்குட்பட்ட இளைஞன் ஒருவன் தான் செய்வது இன்னதென்று அறியாமல் வைத்ததே அத் தீ என்றும் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டது.

இங்கு தொடருகின்ற
இத்தகைய
இனவெறித்
தாக்குதல்களும்,
இவற்றின் தளமான
அரசின் நடவடிக்கை
களும் எங்களுக்குப்
புதியனவா என்ன?!

தமிழர் என்ற ஒரே காரணத்திற்காகவே கடந்த பத்து வருடங்களுக்கும் மேலாக தமிழர்களின் உயிர் குடித்து வரும் சிங்கள பௌத்த இனவெறி.

முஸ்லீம்கள் என்ற
ஒரே
காரணத்திற்காகவே
முஸ்லீம் மக்களை
தமது பாரம்பரிய
பிரதேசங்களிலிருந்து
24 மணி
த்தியாலத்திற்குள்
பொருளையும்,
உயிரையும், உறவுக
ளையும்
பறித்துக்கொண்டு
துரத்திய தமிழ் இந்து
இனவெறி.

இனவாதத்தால் வாழ்விழந்த தமிழர்களின் இனவாதத்தால் மற்றவர்களின் வாழ்வு அழிக்கப்பட்டது.

இலங்கையில்
இனவெறியென்று
ஓடிவந்து அரசியல்
தஞ்சம் கோரிய இடங்
களிலும் அதையே
தரிசிக்கும் பாக்கியம்
பெற்ற ஈழத்
தமிழர்களாகிய எங்
களுக்கு, வந்திருக்கும்
நாடுகள்
நிரந்தரமானவையோ,
பாதுகாப்பானவையோ
அல்ல என்று
மறுபடியும், மறுபடியும்
நினைவூட்டுவதே
ஸோலிங்கன் தீயும்,
அரசின் சட்ட
நடவடிக்கை களும்.

இங்கிருக்கும் வெளி நாட்டவர்களுக்கு எதிராக மட்டுமல்ல, உலகெங்கிலுமுள்ள



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வெள்ளையரல்லாத – ஆரியர் அல்லாத அனைவருக்கும் எதிராக வளர்ந்துவரும் வெறியை. இதனடிப்படையான அரசுகளை அரசை எதிர்ப்பதற்குரிய பலமான ஸ்தாபனமாக தமிழர்கள் இல்லை. மாறாக மொழியையும், "கலாச்சாரத்தையும்", மதத்தையும் வளர்ப்பதாக கச்சை கட்டிக் கொண்டு பலர். பதில், போராட்ட நடவடிக்கைகளுக்குப் பதிலாக கனடாவுக்கு வழி தேடுவதே நடைமுறையில் தொடருகிறது.

மறுபுறம், களத்தில்
இருந்து கேட்கும்
உறுமல்களினால் –
சோடிக்கப்பட்ட
விடியோத்
தரிசனங்களினால்
மறைக்கப்பட்டுவிட்ட
மனிதர்களின்
அவலத்தைக் கண்டு
கொள்ள முடியாமல்,
ஈழத்து அரசியல்
நிகழ்வுகளின்
உண்மைகளுடன்
இணைத்துக்
கொள்ளாமல் பலரின்
உணர்வு
செத்துவிட்டது.

இந் நிலையில்,
– ஈழத்திலும்,
– தஞ்சம் கோரிய நாடு
களிலும்
மனிதரின் குரல் வளை நெரிக்கும் பாஸிஸத்தை முறியடிக்க அதற்கெதிரான நடவடிக்கைகளில் எங்களை இணைத்துக் கொள்ளாதவரை நிம்மதியான வாழ்வை என்னுவது பகற் கனவன்றோ!

## "வடபுலத்துத் தாயும்,மகனும்"

இளைய அப்துல்லா

உம்மா !
உச்சி வெயிலின் வேக்காட்டில்
பாதங்கள் கொப்பளிக்க
என்பது மைல்களை
எப்படியம்மா
கடந்து வந்தாய்?

செத்துப்போகும்
பயங்கரத்தில்...
சீறிப் பாயத் திமிறும்
துப்பாக்கிகளின் மத்தியில்..
கொடூரர்கள்
குடிக்க எத்தனிக்கும்
உயிரைப் பிடித்துக்கொண்டு
கிளாலியூடு
எப்படியம்மா வந்தாய்?

உம்மா,
எங்கள் தாயகத்து
தடயங்கள் பற்றி
கொஞ்சம் சொல்

பள்ளிவாசல்களில்
பாங்கு ஒலிக்குதாம்மா?
நல்லூர் கந்தனின்
வெளிவீதியில்
சூரசம்காரம்
செய்யப்படுகிறதாம்மா?

உம்மா,
பக்கத்து வீட்டு வதனா
எப்போதும் பாயாசம் தருவாளே..
அவள் நலமுடன்தானா
உம்மா?

தைப்பொங்கல்,
நோன்புப் பெருநாள்,
தீபாவளி,
ஹஜ்ஜுப் பெருநாள்,
வைகாசிப் பொங்கல்,
மீலாத் விழா...?

உம்மா,
ஏனம்மா அழுகிறாய்?
எதுவுமே இல்லையா?
உம்மா,
இவைகள் இல்லையென்றால்..
அப்போ என்னம்மா...?



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


ஓகஸ்ற் 1993
கலம்: 58
முகவரி:


THOONDIL
Sudasien Buro
Grosse Heim Str. 58
44137 Dortmund
Germany

சந்தா:
(6 மாதங்களுக்கு
தபாற் செலவுடன்)
உள்நாடு: 20,-டி.எம்.
ஐரோப்பா: 22,-டி.எம்.
பிற: 28,-டி.எம்.
தபாற் கணக்கு இல:
308 07 468

Postscheckamt-
Dortmund
BLZ 440 100 46





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்